பதிவுஎண் 2041

தனிப்பிரதி VP 82 ERODE



குடி அரசு

சந்தா விபரம்.

	ரூ. அ.
வருட சந்தா.	3—0
6 மாத சந்தா.	1–12
வெளிநாடுகளுக்கு வருட சந்தா	4—0

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

விளம்பர விகிதம்.

	ரூ. அ
காலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு	5—0
சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு	0—8

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஹு பங்குனி-மீ அ-உ (21—3—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் சாு



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

S. இராமநாதன்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

S. இராமநாதன் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

கோயமுத்தூர்,

சட்டசபை வெளியேற்றக்கொண்டாட்டம்

கூட்டத்தில் குழப்பம்

சென்னைச்சட்ட சபையினின்றும் சுயராஜ்ஜியக் கட்சியினர் வெளியேறியதை ஆதரித்து சந்தோஷத்தை அறிவிக்க 16-3-26-ந் தேதி மாலை 7-மணிக்கு டவுன் ஹால் மைதானத்தில் காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக ஒரு கூட்டம் கூடப்பட்டது. கூட்டத்திற்கு ஸ்ரீமான் வக்கீல் சுப்ரமண்ய அய்யர் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான்கள் வெங்கிடாச்சாரியார், சி. பி. சுப்பையா, மகாலிங்கையர் முதலியவர்கள் சுயராஜ்ஜியக் கட்சியார் சட்டசபையினின்றும் வெளியேறிய வீரப்பிரதாபங்களையும் அவர்கள் வெளியில் வந்து ஜனங்களுக்கும், ஓட்டர்களுக்கும் செய்யப்போகும் உபதேசத்தைப்பற்றியும், அவர்கள் திரும்பியும் அடுத்துவரும் தேர்தலில் சட்டசபைக்குப்போகவேண்டியதற்கு ஓட்டர்கள் உதவி செய்யவேண்டுமென்பதைப் பற்றியும், பேசினார்கள். அதன் பின்னர் இந்தியா சட்ட சபையைவிட்டு வெளிவந்தபோது ஸ்ரீமான்கள் பண்டிதநேரு முதலியவர்கள் பேசிய "வீரமொழி"யைப்பற்றி ஸ்ரீமான்கள் மகாலிங்கையரும், சுப்ரமணிய அய்யரும் பத்திரிகையிலிருந்து மொழி பெயர்த்துச் சொன்னார்கள். இவர்கள் மொழி பெயர்ப்பு நீளவே கூட்டத்தினர் ஏன் பழைய பாடம் படிக்கிறீர்கள், நிறுத்துங்கள் நிறுத்துங்கள் என்று சொன்னார்கள். இவர்கள் மொழி பெயர்ப்பு முடிந்ததும் பெருந்துறை ஸ்ரீமான் S. A. கணேசன் எழுந்து தாம் கூட்டத்தில் சிறிது நேரம் பேசவேண்டுமென்று அனுமதி கேட்க தலைவர் நேரமாகி விட்டதே என்று ஆக்ஷேபித்தார். ஸ்ரீமான் சி. பி. சுப்பையா என்பவர் நீங்கள் சுராஜ்ஜியக் கட்சியாரை ஆதரித்துப் பேசப் போகிறீர்களா? ஆக்ஷேபித்துப் பேசப்போகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு ஸ்ரீமான் எஸ். ஏ. கணேசன் சுராஜ்ஜியக் கட்சி வெளிவந்ததைப்பற்றி நாம் சந்தோஷிக்க வேண்டியதா?, இல்லையா? என்பதைப்பற்றிப் பேசப்போகிறேன். என்றார். உடனே பேச உத்தரவு கொடுத்தார்கள். உடனே அவர் எழுந்து, சுராஜ்ஜியக் கட்சியார் சட்டசபைக்குள் போய் ஒத்துழையாமை செய்யப்போகிறோம் என்று ஆதியில் சொன்னதையும், அதன் பின் கவர்ன்மெண்டு ஒத்துழைத்தால் தாங்களும் ஒத்துழைப்பதாகச் சொன்னதையும், இப்போது கவர்ன்மெண்டார் ஒத்துழைக்காதிருந்தும், சட்டசபைக் காலாவதி தீரும் வரை உத்தியோகம் கமிட்டி முதலியது பெற்று ஒத்துழைத்து வந்ததையும், கடைசியாக காங்கிரஸ் பெயரைச்சொல்லி மீண்டும் சட்ட சபைக்கும் போக ஆசைப்பட்டு ஜனங்களை ஏமாற்றி ஓட்டுக்கேட்க, அவர்கள் இப்போது சட்டசபையை விட்டு விலகியதாய் சொல்வதையும், பண்டிதநேரு சொல்வது போன்ற உபயோகமற்ற சபைக்கு மீண்டும் சுயராஜ்ஜியக் கட்சியார் எதற்காகப் போகவேண்டுமென்றும், இந்த ஆறு வருஷமாகச் சட்ட சபையில் கண்டுகொள்ளாத அனுபவம் இனியென்ன புதிதாய் கண்டுகொள்ளப் போகிறார்களென்றும், சொல்லிவிட்டு, பண்டிதநேரு முதலிய தலைவர்கள் சொன்னதைக் கூட்டத்தில் படித்ததைப்போல், நம் நாட்டுத் தலைவர்—நம் நாட்டிற்கு அரும் பாடுபட்டவர்—3, 4 தடவை தேசத்திற்காக சிறை சென்றவர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கரவர்கள், தமது "குடி அரசு" பத்திரிகையில் சுயராஜ்ஜியக் கட்சியார் வெளியேறியது சுயநலத்திற்கென்றும், நேரு அவர்களே தம்மால் ஒன்றும் சாதிக்க முடியவில்லையென்றும் ஒப்புக்கொண்டுவிட்டு மீண்டும் சட்ட சபைக்குப்போவது அர்த்தமில்லையென்றும், எடுத்து விபரமாக எழுதியிருக்கும் தலையங்கத்தை 2-தரம் வாசித்துக் காட்டிவிட்டு, எனக்குமுன் பேசிய தலைவர்கள் இதற்குப் பதில் சொல்லவேண்டுமென்றும் கேட்டார். உடனே ஸ்ரீமான் மகாலிங்கையர் எழுந்து தாம் பதில் சொல்வதாகச் சொல்லி எழுந்து, கேள்விக்குப்பதில் சொல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியினரைத் தாக்கப்பேச ஆரம்பித்தார். உடனே கூட்டத்தினர் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டுமே ஒழிய, மற்ற விஷயங்களைப்பற்றி ஒன்றும் சொல்லக்கூடாதென்றும் கட்டளை இட்டனர். மீண்டும் ஐயர் ஜஸ்டிஸ் கக்ஷியைப்பற்றி பேச ஆரம்பிக்க ஜனங்கள் அதைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாதென்று தடுத்து விட்டனர். பின் ஸ்ரீமான் மகாலிங்கையர் கேள்விக்குப்பதில் சொல்லுவதை விட்டு தாம் தலைவர்களைப்பற்றிப் பேசியது தப்பு என மன்னிப்புக்கேட்டார். அதன் பின் ஜனங்கள் பதில் சொல்ல அனுமதி கொடுத்தனர். ஐயர் கேள்விக்குப்பதில் சரியாகச் சொல்லாமல், சுயராஜ்ஜியக் கட்சியார் வெளியில் வந்து 8-மாதத்திற்கு ஓட்டர்களுக்கு உபதேசம் செய்வார்கள், என்று மட்டும் கூறி விட்டார். அது பதிலல்ல எனக்கூட்டத்தினர் சொன்னார்கள். இதற்கிடையில் ஸ்ரீமான் ராமண்ணா என்ற ஒரு பிராமணர் எழுந்து சுயராஜ்ஜியக் கட்சியார் சட்டசபையை விட்டு வெளியில் வந்தது மறுபடியும் உள்ளே போவதற்குச்செய்த சூட்சி என்றும், இன்று சட்டசபையை விட்டு வெளியில் வந்த இந்த ஊர் ஸ்ரீமான் வெங்கட்ரமணய்யங்கார் என் டிஸ்டிரிக்டு போர்டு முதலிய பலதுகளுக்கு நாமினேஷன் மெம்பராயிருக்க வேணுமென்றும், இந்த ஜில்லா மூன்று மெம்பர்களும் 2-தடவை சட்ட சபைக்கு போனதில் எந்த வகையில் வேலை செய்து ஜனங்களுக்கு என்ன நன்மை செய்து விட்டனரென்றும், இந்த ஆறு வருஷமாக அலவன்ஸ் வாங்கிக் கொண்டு வெட்டியில் போன இவர்கள் இந்த வருஷம் தான் போகாமலிருந்து இன்னும் சிலருக்குத்தான் போக இடங்கொடுத்தால என்ன, இவர்கள் பாட்டன் சம்பாதித்த முதல் முழுகிப்போகிறதென்றும், அநியாயமாக காந்தியடிகளை ஒரு மூலையில் தள்ளிவிட்ட சுயராஜ்ஜியக்கட்சியார் துரோகிகளென்றும், இவர்களை யோக்கியர்களென்று கூட்டம் போட்டு இவர்கள் வெளி வந்ததற்கு சந்தோஷப்படுவது மூடத்தனமென்றும் பேசினார் அக்கிராசனர் இனி பேசக்கூடாதென எழுந்து தடுத்தார். ஜனங்கள் அவர்தான் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அக்கிராசனர் உட்கார்ந்து விட்டார். மீண்டும் ஸ்ரீமான் ராமண்ணா என்பவர் சிறிது நேரம் பேசி உட்கார்ந்தார். ஸ்ரீமான் மகாலிங்கய்யர் மீண்டும் தான் 2-நிமிஷம் பேச கூட்டத்தினரை அனுமதி கேட்டார். ஜனங்கள் பேச வேண்டியதில்லையென்று சொல்லி விட்டனர். தம் பேச்சைக் கேட்கிறவர்கள் கேட்கட்டுமென்று பேசினார். ஜனங்கள் கலைந்து போகவே ஐயர் அவர் பேச்சை நிறுத்திக்கொண்டார். இன்னும் இரண்டொருவர்கள், தாம் பேசவேண்டுமென்று எழுந்து கூச்சலிட்டனர். கூட்டத்தினர் போதும போதும் உட்காருமென்றார்கள். ஸ்ரீமான் தேசிகம் என்பவர் எழுந்து யாருக்கு ஓட்டுக் கொடுத்தாலும் தண்ணீர் வரி போட்டவருக்கு ஓட்டுப்போடாதீர்கள் என்றார். எதிரிலிருந்த ஒரு பெரியவர் தண்ணீர் வசதிவேணுமென்று முப்பதுவருஷமாய்கேட்டயோக்கியர்கள் ஏன் இப்போது வரி கொடுக்க ஆக்ஷேபிக்க வேண்டும்; வரியில்லாமல் எப்படி தண்ணீர் வரும்; ஏன் அவருக்கு ஓட்டுக்கொடுக்கக்கூடாது; ஒருவரைப்பற்றி எதற்காகப் பேச வேண்டும் உட்காரும்; என்று சொன்னார். அத்துடன் ஸ்ரீமான். தேசிகம் அடங்கினார் கூட்டத்தில் ஒரு தீர்மானமும் செய்யவில்லை. குழப்பத்தில் முடிந்தது.

கோயமுத்தூரில் பேச்சினாலேயே பெரியமனிதராக வேண்டுமென்று சிலர் காங்கிரஸ் போர்வையைப் போர்த்திக்கொண்டு எதற்குப் பார்த்தாலும் கூட்டம் கூட்டி பொய்யும் புளுகும் சொல்லியும் ஜனங்களை ஏமாற்றி வருகின்றனர். இவர்கள் கூட்டம் கூட்ட வேறுவகையில்லாததால் பார்க்கட்டில் கூட்டம் கூட்டுவதும் சாமான்கள் வாங்க வரும் ஜனங்களை நிறுத்திக்கொண்டு, தங்கள் சொந்த விரோதத்திற்காக பலரை வைவதும் வழக்கமாகி விட்டது. சிலர் மீட்டிங்கில் கூச்சல் போட்டு கலவரம் செய்கிறார்கள். அது தவறு 16 ந்தேதி மீட்டிங்கு நடந்தது போல் கூட்டம் போட்டார்களானால் உடனே அவர்கள் பேசியபின் என்னென்ன பொய்யும் புளுகும் பேசினார்களோ, அதற்கு அதே கூட்டத்தில் அனுமதி வாங்கி பதில் சொல்லலாம், அனுமதிகொடுக்க மறுத்தால், உடனே வேறு கூட்டம் கூட்டிப்பேசி ஜனங்களுக்கு உண்மையை விளக்கவேண்டும். சிலர் கூட்டத்தில் "கை தூக்கிக் கழுதைகள்" என்று தூர்ப்பாஷையாக பேசுகிறார்களே அவர்களுக்கு எப்போது பதில் சொல்லுவது என்று எண்ணலாம். அப்படி அவர்கள் பேசினாலும் அந்த ஸ்தானத்தை பேசினவர்களுக்கே விட்டுவிட வேண்டுமேயல்லாது அதற்காகக் கலவரம் செய்யக்கூடாது.

ஒரு நிருபர்.

பிழை திருத்தம்.

7—3—26-ந் தேதி "குடி அரசு" பத்திரிக்கையின் 13—வது பக்கம் 2-வது கலத்தில் உள்ள "தர்மபரிபாலன இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான். டி. ஆர். பாலசுந்திரம் பிள்ளை," என்பதை டி. ஆர். சுந்திரம் பிள்ளை என்று திருத்தி வாசிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

டிப்டி கலெக்டர் உத்தியோகம்.

இவ்வுத்தியோகமானது நமது நாட்டின் ராஜ்ய பாரத்திற்குக் கடுகளவு உபயோகமும் இல்லாமல்,—வெறும் தபாலாபீசைப் போல் காகிதம் வாங்கி மேலாபீசுக்கு அனுப்புவதும்—அரசாங்க ஜாதியாரின் சுயநன்மைக்காகவே இருந்து நமது பணத்தின் ஒரு முக்கிய பாகத்தைச் செலவு செய்துகொண்டும் வருகிறது. சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக ஒரு ஜில்லாவை 4—4 தாலூக்காக்கள் கொண்ட 2 டிவிஷன் அல்லது மூன்று டிவிஷன்களாய்ப் பிரித்து சப். கலெக்டர் என்பவருக்கு ஒரு டிவிஷனும், எட்அஸிஸ்டெண்டு கலெக்டர் என்பவருக்கு ஒரு டிவிஷனும், அஸிஸ்டெண்டு கலெக்டர் என்பவரை, ஜில்லாக் கலெக்டர் என்பவர் தன்னிடம் வைத்துக்கொண்டு, அவருக்கு ஒரு சின்ன டிவிஷனுமாய்க் கொடுத்துவந்தார்கள். அப்படியிருந்தாலும் அவர்களுக்குப் பல வேலைகள் இருக்கும். அதாவது கிரிமினல் கேசு விசாரணைகள் கிரிமினல் அப்பீல்கள், ரிவினியூ வேலைகள் முனிசிபாலிட்டி மேல்பார்வை, தாலூகா போர்டு மேல்பார்வை, இன்கம்டாக்ஸ் போடும் விஷயம் ரெக்கூலி விதிப்பது, ஜிவாஜிநாமா உத்திரவு முதலியவைகள் போடுவது, நேரில் பார்ப்பதும் ஆகிய வேலைகள் இருக்கும். இவருக்குக் கீழுள்ள தாசில்தாருக்கும், ரிவினியூ வேலையுடன், கிரிமினல் வேலையும் நிறைய இருக்கும். இப்போது மூன்று டிவிஷனை, 2—2 தாலூகாக்கள் கொண்ட 5 டிவிஷன்களாக்கி 5 டிப்டிக் கலெக்டர்களுக்குக் கொடுத்து, கலெக்டருக்கும் உதவிக்காக, ஒரு டிப்டிக் கலெக்டர் கொடுத்து, ஆக ஜில்லா ஒன்றுக்கு அல்லது, ஆறு டிப்டி கலெக்டர்களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அல்லாமலும், தாசில்தார்களுக்கு இருந்த கிரிமினல் உத்தியோகத்தையும் பிரித்து சப். மாஜிஸ்திரேட் என்றும், டிப்டி தாசில்தார் என்றும், உத்தியோகங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு அதை ஒப்புவித்துவிட்டு, டிவிஷனல் ஆபீசர் அல்லது டிப்டி கலெக்டர்கள் என்பவர்களுக்கு இருந்த ரிவினியூ வேலைகளையும், பெரும்பாலும் தாசில்தார்களுக்குக் கொடுத்து விட்டார்கள். அல்லாமலும், அவர்களுக்கு இருந்த மற்ற வேலைகளும்—அதாவது, முனிசிபல் சம்பந்தமான வேலைகள், தாலூகா போர்டு சம்பந்தமான வேலைகள், இவைகள் முழுவதிலும், டிப்டி கலெக்டருக்கு ஒரு வேலையும் இல்லாமல் போய்விட்டது. இன்கம்டாக்ஸ் வேலையும், டிப்டி கலெக்டர்களிடமிருந்து பிடுங்கி, இன்கம்டாக்ஸ் ஆபீசர் என்று ஜில்லா ஒன்றுக்கு 2 அல்லது மூன்று பேர் வீதம் கொண்ட வேறு டிப்பார்ட்மெண்டு ஏற்படுத்தி, அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டுப் போய்விட்டது. முக்கிய பட்டணங்களில் முதல் வகுப்புப் பெஞ்சு கோர்ட்டு ஏற்படுத்திவிட்டதால், கிரிமினல் அப்பீல்களும் குறைந்து போய்விட்டது. பல தாசில்தார்களுக்கு முதல வகுப்புக் கிரிமினல் அதிகாரம் கொடுக்கப்பட்டதால், டிப்டிக் கலெக்டர்கள் விசாரிக்கத் தகுந்த கேசுகளும், தாசில்தார்களுக்கு அனுப்பத்தகுந்ததாய்ப் போய்விட்டது. இவ்வளவு அதிகாரங்களும், வேலைகளும் குறைந்திருக்க, எண்ணிக்கையும், சம்பளமும் குறையாமல், அதிகாரம் குறைந்துவிட்டதால் மேல்வரும்படியும் குறைந்திருக்கும் என்கிற எண்ணம் கொண்டு செய்ததுபோல் பிறர் நினைக்கும்படி, சம்பளங்களையும் ஒன்றுக்கு ஒன்றறையாய் உயர்த்தப்பட்டும் போய்விட்டது. சாதாரணமாய் இப்பொழுது டிப்டி கலெக்டர் என்பதும், டிப்டி கலெக்டர் ஆபீசு என்பதும், ஒரு தபாலாபீசைப்போல் கீழே இருந்து வரும் காகிதங்களை முத்திரை போடுவதுபோல் டிப்டிக் கலெக்டர் கையெழுத்துப்போட்டு மேலே அனுப்புவதும், மேலே இருந்துவரும் காகிதங்களை அதே விதம், கீழே அனுப்புவதுமான வேலைகளைத் தவிர டிப்டிக் கலெக்டர்களுக்கென்று என்ன அசல் (ஒரிஜனல் வொர்க்) வேலை இருக்கிறது? டிப்டிக் கலெக்டர்கள் 500, 600, 800, 1000, 1200 என்று சம்பளங்களை வாங்கிக்கொண்டு ஆபீசுகளுக்கு வந்து மேஜையின் மேலே முழங்கையை வைத்து, தாவாக்கட்டையை உள்ளங்கைகளில் தாங்கிக்கொண்டு குறிப்பில் (டைரியில்) என்ன வேலை செய்ததாக எழுதிக்காட்டலாம் என்று யோசிப்பதும், பிரயாணச் செலவு பெற (டிராவலிங் அலவன்ஸ்) நாளைக்கு எந்த ஊர் போகலாம் என்பதும், கலெக்டர் தயவு பெறுவதற்கு, என்ன இரகசிய யாதாஸ்து (கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்) எழுதலாம் என்கிற யோசனையும், கலெக்டர்களுக்கு மீனும், [illegible] மும்; கோழியும் ஆடும் வாங்கிக் [illegible] துரைசானி தயவு சம்பாதிக்க [illegible] யில் காத்திருந்து, மூக்கு நிலத்தில் படும்படி குனிந்து சலாம் போடுவதுமல்லாமல், வேறு ஒரு தொழிலுமே இல்லாமல் போய்விட்டதோடு, அநாவசியமாய் ரிவினியூ வேலைகளை இரட்டிக்கவும், காலதாமதமாகவும், பொதுஜனங்களுக்கும் ஒரு வேலை ஆகவேண்டுமானால், தாசில்தார் தயவு, தாசில்தார் ஆபீசு குமஸ்தாக்கள், சேவகர்கள் தயவு சம்பாதிப்பதோடல்லாமல், டிப்டி கலெக்டர் தயவும், அந்த ஆபீஸ் குமஸ்தா சேவகர்கள் முதலியவர்கள் தயவும் பெறவேண்டியது, அவசியமான இரட்டிப்பு கஷ்டமும் நஷ்டமும்; காலதாமதமும் ஆகும்படியாய் ஏற்பட்டு விடுகிறது.

இந்த ஒரு இலாகாவால் நமது வரிப்பணத்தில் ஏறக்குறைய ரூ 1—க்கு ஒரு அணா வீதம் அனாவசியச் செலவு ஆகிறது.

அதாவது:— நமது மாகாணத்தில் இது சமயம் ஏறக்குறைய 150 காயம் (பர்மனெண்ட்) டிப்டிக்கலெக்டர்களும், சுமார் 90 அல்லது 100 ஆக்டிங்டிப்டிக் கலெக்டர்களும் இருக்கின்றார்கள். இந்த 150 பேருக்கும் ஆள் 1-க்கு மாதம் 1—க்கு 300 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கப்படுகின்றன. ஆக்டிங் டிப்டி கலெக்டர்களும் மாதம் 300 ரூ குறையாமல் 500 ரூ வரை கூட வாங்குகிறார்கள்.

இவர்களுக்காக என்ன குறைந்தாலும் நமது மாகாணத்தில் மட்டும் 150 ஆபீசுகள் வரை டிப்டிகலெக்டர் ஆபீசு என்ற பெயரா லேயே இருந்து வருகிறது. இவர்களுக்கு குமாஸ்தாக்கள் 80 ரூ சுமாரில் 2 பேர், 35 முதல் 60 ரூ சுமாரில் 3 பேர், ஆக 5 குமாஸ்தாக்களுக்குக் குறையாமலும், பியூன்கள் என்று சொல்லும் பில்லே சேவகர்கள் 5 பேரும், இவர்களுக்கும் சராசரி மீ 75 ரூபாயும், கண்டிஞ்செண்ட் மீ 200 ரூபாயும் பிரயாணச்செலவு (டிராவலிங் அலவன்ஸ்) மீ 250 ரூபாயும், ஆக ஒரு டிப்டிகலெக்டர் ஆபீசுக்கு மாதத்தில் சராசரி கட்டட வாடகை உட்பட 1600 ரூபாய் வீதம், வருடத்திற்கு சுமார் 20,000 ரூபாய், இம்மாதிரி 150 ஆபீசுகளுக்கும் 3000000 ரூ (முப்பது லக்ஷம் ரூபாய்) இவர்களுக்குப் பென்ஷன், லீவு வகையறா, ஆக்டிங் டிப்டிக் கலெக்டர்கள் முதலியவைகளும் சேர்த்தால், அதுவும் கிட்டத் தட்ட 4 அல்லது 5 லக்ஷம் ரூபாய்க்குக் குறையாது. ஆக சுமார் வருடம் 1க்கு 35 லக்ஷம் ரூபாய் செலவாகிறது. இதல்லாமல் ஜனங்கள் இவர்கள் தயவு பெறக்கொடுக்கும் கிஸ்தியும், சப்ளையும், மற்றும்பல இழி தொழில்கள் செய்வதன் மூலமும் எவ்வளவோ பணம் செலவாகிறது. ஆக இவ்வளவும் குடிகளுடைய பணம் அநாவசியமாய்ச் செலவாவதோடு அலைச்சல், ஒழுக்கக்குறைவு எவ்வளவு ஏற்படுகின்றன.

இதல்லாமல் இந்த உத்தியோகங்களுக்குப் போட்டி போடுவதன் மூலம், நம்மில் படித்தவர்கள், புத்திசாலிகள் என்று சொல்லத்தக்கவர்கள் எவ்வளவு தூரம் தங்கள் மனச்சாக்ஷியை விற்கவும், அடிமைப்படவும் நேரிடுகிறது. இவற்றை நமது நாட்டினர் கவனிப்பதில்லை. நமது நாட்டினரை ஏமாற்றிச் சட்டசபைக்குப் போகும் படித்தவர்கள், புத்திசாலிகள் என்று சொல்லிக்கொள்ளும் [illegible] களும் இதைப்பற்றிப் பேசப்பயப்படுகிறார்கள். ஏனென்றால், இம்மாதிரி உத்தியோகங்களைக்கொண்டு தானே, தங்கள் இனத்தார்கள் பிழைக்க முடியும். சர்க்காருக்கும் இம்மாதிரி உத்தியோகமான பல துண்டுகள் கைவசமிருந்தால் தானே, கடிக்க வருவது கடிக்கிறது போல் ஆளுக்கொரு துண்டு வீசலாம். சர்க்கார் ஜாதியார் பிழைக்கவும், படித்த ஜாதியார் பிழைக்கவும், ஏழை ஜனங்கள் பணம் எவ்வளவு வீணாகிறது. இம்மாதிரி அதிகச்செலவும் இன்னமும் போலீஸ் இலாகாவில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்கிற கண்ட உத்தியோகத்திற்கு அழுகும் செலவும், டெபுடி டைரக்டர் ஆபீசு என்று சொல்லத்தகுந்த ரிவினியூ போர்டு ஆபீசும் ஒழிந்தால், கள்ளு வரும்படி நின்றால் சர்க்கார் எப்படி நடைபெறும் என்று யாரும் பயப்படவேண்டியதே இல்லை.

இதைக் கவனிப்பவர்கள் யாரும் இல்லை. இரண்டொரு வருடங்களுக்கு முன்பு டிப்டி தாசில்தார்களைக் குறைத்துவிடலாம் என்று சர்க்காரே யோசனை செய்து, பொது ஜன அபிப்பிராயம் கேட்டபோது, நம் ஜில்லா சட்டசபை மெம்பர் ஸ்ரீமான். சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் அதை எடுக்கக் கூடாது; எடுத்தால் பிராமணர்களுக்கு வேலை குறைந்து போகும் என்ற கருத்துடன் அதை எதிர்த்து அவ்வுத்தேசத்தைப் பாழாக்கி விட்டார். எனும்புருக்கு வியாதி மாதிரி இந்த உத்தியோகங்களும், இம்மாதிரி சட்டசபை மெம்பர் ஜாதியும் நமது நாட்டுக்குப் பெரிய ஆபத்தாயிருக்கிறது.

ரோஜா முத்தையா

வித்யோதயா.

'வித்யோதயா' என்னும் பெண்மக்களின் உயர்தரக் கல்லூரி சென்னைக்குப் பன்னிரண்டு கல்லிலுள்ள பல்லாவரத்தின்கண் திறக்கப்பட்டுச் சென்ற இரண்டு ஆண்டுகளாக நன்கு நடந்து வருகின்றது. இது சென்னையில் உயர்தரமன்றில் (High Court Civil Judge) நடுநிலையாளராய் வேலை பார்க்கும் திருவாளர் அப்பாசாமி என்பவரின் மனைவியாராகிய அப்பாசாமி அம்மாள் பி. ஏ. அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. பல்லாவரம் நல்ல காற்றுள்ள இடமென்று மருத்துவர்களால் மிகவும் பாராட்டப்படும் ஊராயிருத்தலின், இதன்கண்ணே மக்கள் நெருக்கமில்லா இடத்தில் பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அவரவர் தாய் மொழிகளாகிய தமிழ் தெலுங்கு முதலியனவும், ஆங்கிலமும் பட்டம் பெற்ற கற்றறிவுடைய பெண் பாலரால் செவ்வையாகக் கற்பிக்கப் படுகின்றன. பிள்ளைகட்கு ஆங்கிலம் கற்பிக்கவும் தலைவியாகவும் இருக்கவும் இங்கிலண்டிலிருந்து வரவழைத்த ஓர் ஆங்கிலமாதும், அவரோடு சேர்ந்துழைக்கும் தலைவியாக பி. ஏ பட்டம் பெற்ற மற்றோர் இந்தியக் கிருஸ்துவ மாதும், தமிழ் கற்பிக்க ஒரு தமிழ் மாதும், கணக்குக் கற்பிக்க பி. ஏ பட்டம் பெற்ற வேறொரு மாதும், ஓவியம் தீட்டுதலும், ஆங்கில இசைக்கருவியும் கற்பிக்க இங்கிலாந்திலிருந்து வரவழைத்த ஓர் ஆங்கில மாதும், இந்திய இசைக்கருவி கற்பிக்க ஓர் இந்தியரும், பிள்ளைகளை மேற்பார்க்க வேறு ஒரு மாதும் ஆக ஏற்படுத்தப்பட்டுப்பள்ளிக்கூடம் செவ்வையாக நடந்து வருகிறது. வெளியூரிலிருந்த வரும் பிள்ளைகட்குத் தங்கும் இடங்கள் மிக வசதியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகள் தங்கும் இடத்திலேயே உபாத்திமார் (ஆசிரியர்களும்) களும் தங்கியிருந்து பல வகையிலும் பிள்ளைகட்கு உதவி செய்து வருகின்றார்கள். வெளியூரிலிருந்து வந்து பள்ளிக்கூடத்திலேயே தங்கியிருந்து படிக்கும் பிள்ளைகட்குத் தங்கும் இடத்தில் படுக்கக் கட்டிலும், உடுப்பு வைக்க நிலைப் பெட்டியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பன்னிரண்டு ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகட்கு உணவுக்காக 20 ரூபாயும், பன்னிரண்டு ஆண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகட்கு 25 ரூபாயும் கொடுத்தல் வேண்டும். பள்ளிக்கூடச் சம்பளம் முதல வகுப்பிலிருந்து இரண்டாண்டு வரையில் 2 ரூபாயும், பின் மற்ற வகுப்புகட்கு 5 ரூபாயும், 7 ரூபாயும் 'சீனியர் கேம்பிரிட்ஜ்' பத்தாவது வகுப்பிற்குப் 10 ரூபாயும், இசைக் கருவிகள் கற்பதற்கும் சம்பளம் வேறு. தமிழ் இசைக்கருவி கற்பிக்கச் சம்பளம் ரூபாய் 3. ஆங்கில இசைக்கருவி கற்பிக்கச் சம்பளம் ரூபாய் 5.

இப்பள்ளிக்கூடத்தை ஒழுங்குபெற நடத்த முதல் தொகை ஏராளமாக வேண்டுமாதலின், அப்பாசாமி அம்மாள் அவர்கள் சென்ற ஆண்டு அமெரிக்கா சென்று சிறு தொகை சேர்த்து வந்தனர். இப்பள்ளிக்கூடத்திற்கெனப் பணக்காரர்களும் தங்கள் தங்களால் இயன்றவாறு பண உதவி செய்கின்றனர். ஆனாலும், மூதல் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. இஃது எக்காலமும் நிலை பெற்று நடக்கும்படி செய்தல்வேண்டும். எவ்வகையிலாயினும் முயற்சி செய்து முதல் தொகை சேர்த்து வைத்தல் வேண்டுமென்று ஸ்ரீமதி அப்பாசாமி அம்மாள் அவர்கள் தன் மெய் வருத்தம் பாராது பல ஊர்கட்கும் செல்லுகின்றார்கள். இதன் பொருட்டாகவே இப்போது அவர்கள் மலாய் நாட்டுக்கு வருகின்றார்கள். இந்தியப் பெண் பிள்ளைகள் வெளியூரிலிருந்து வந்து இப்பள்ளிக்கூடத்திலேயே தங்கியிருந்து படிக்க வேண்டுமானாலும் அவர்களுக்கென சைவ உணவும், தங்கும் இடங்களும் ஒழுங்காக ஏற்பாடு செய்வார்கள்.

வே. நாகை. நீலாம்பிகை அம்மாள்,
'வித்யோதயா' தமிழ் பண்டிதை,
பல்லாவரம்.

திருச்சி தாலூகா காங்கிரஸ் கமிட்டி

அறிவிப்பு.

திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் தேர்ந்தெடுத்த அதாவது என்னைக் காரிய தரிசியாய்க் கொண்ட தாலூகா கமிட்டியை மாகாணக் காங்கிரஸ் கமிட்டியார் அங்கீகரித்துவிட்டனர். ஆகவே, காங்கிரஸ் அங்கத்தினராய்ச் சேர விரும்புவோர் என்னிடமோ, தாலூகா கமிட்டி அதிகாரம் பெற்ற அன்பர்களிடமோ சந்தாப்பணத்தைச் செலுத்துதல் வேணடும் என காரியதரிசி ஸ்ரீமான் மே, வே. துரைசாமி உடையார் எழுதுகிறார்.

கொலை மறுத்தற் பிரசாரம்.—

முசிரி சிவன்கோவில் முன்னிலையில் 7-3-26 தேதி யன்று மாலை 4-45 மணிக்கு கூடிய கூட்டத்தில் ஸ்ரீமான் மு. வாசுதேவம் பிள்ளை யவர்களின் அக்கிராசனத்தின் கீழ் திருவாளர் சுவாமிநாத தேசிகர் அவர்கள் "கொல்லாமை" என்பது பற்றி ஓர் சொற்பொழிவு செய்தார்கள்.

8—3—26 தேதி யன்று இரவு 8-மணிக்கு முசியைச் சேர்ந்த வடுகபட்டியில் ஸ்ரீமான் சிவசுப்ரமணிய ஐயர் அவர்களின் அக்ராசனத்தின் கீழ் திருவாளர்கள் சொக்கலிங்கம் செட்டியாரும் சுவாமிநாத தேசிகர் அவர்களும் 'தேவதைகளுக்கு உயிர்ப்பலியிடுதல்' என்பது பற்றி பேசினார்கள்.

முசிரியைச் சேர்ந்த கிராமங்களிலும் தெருக்களிலும் சுவர் நோட்டீசுகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. கொலை மறுத்தற் சம்பந்தமான பல ரகமுள்ள துண்டு பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. முசிரியிலுள்ள மக்களனைவரும் அடுத்துவரும் கிரமதேவதையுற்சவ காலத்தில் பலி யிடுதல் கூடாதென பேசி வருகின்றார்கள். சில அறிவிலிகள் இப்பெரும் புண்ணியத்திற்கெதிர் பிரசாரம் செய்து வருகின்றனர். அவர்களறியாமை நீங்குமாறு ஆண்டவனை வேண்டுகின்றோம். இவ்வருடத்தில் இப்பிரசாரத்தின் பயனாய் சமீப உற்சவத்தில் பல ஆடு கோழிகளின் உயிர்கள் பிழைப்பிக்கப்படலாமென நம்புகின்றோம்.

உண்மையுரைப்போன்.

கொங்கு வேளாளர்

மஹா நாட்டின் தீர்மானத்தின் பலன்.

ஈரோடு தாலூக்கா வாயப்பாடி சாராயக்கடை 1—3—26 தேதி ஏலம் போடப்பட்டது. அவ்வூர் பிரபல மிராசுதாரரும் கொங்கு வேளாள குலத்தினருமான ஸ்ரீமான் ரத்தினசாமிக் கவுண்டர் குமாரர் முத்துசாமிக் கவுண்டர் ஏலமாகு மிடத்துக்கு விஜயம் செய்து வேளாள குலத்தினர் யாரும் வாயப்பாடி சாராயக்கடையை எடுக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, ஏலம் கூற வந்திருந்த வேளாள குலத்தினர் ஏலம் கூறாமல் நின்றுவிட்டனர். வேளாள் குலத்தினர் நின்றுவிடவே மற்றெவரும் ஏலம் கூறவில்லை. அதிகாரிகள் என்ன முயற்சித்தும் ஒருவரும் கடை எடுக்கவில்லையென்று கேட்டு சந்தோஷிக்கிறோம்.

பார்க்கவ குலச்சங்கம்.

(தலைவர்களின் பிணக்குகள்).

திருச்சி பொன்மலை "தெய்வீகன்" ஆசிரியர் ஸ்ரீமான். மே. வே. துரைசாமி உடையார் பின் வருமாறு எழுதுகிறார்:—

மாகானச் சங்க நிர்வாகிகளுள் ஒரு உண்மைக் குலாபிமானி அழுக்காறு கொண்ட அவர் தம் நண்பர் துற்போதனையால் சங்கத்தின் மீதிலும், சங்க அங்கத்தினர்கள் மீதிலும், ஐயங்கொள்ளுகின்றார். இங்ஙனம் சந்தேகப்படுவது தவறு என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்வதுடன், பிறர் பேச்சு கேளாதிருக்குமாறு எச்சரித்துக்கொண்டு, தலைவர்களிடம் நேரில் கலந்து உண்மையை உணர்ந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

வேறொரு குலத்தலைவர் சுத்த ஆகாரம் உட்கொள்ளுகிறவர்களை மட்டுமே சங்கத்தில் சேர்க்க வேண்டுமென்ற அபிப்பிராயங்கொண்டுள்ளாரென்றறிகிறேன். அனைவரையும் சங்கத்திற் சேர்த்து சீர்திருத்துவது சாலவும் சிறந்ததென்பது அடியேனது உள்ளக்கிடக்கையாகும்.

மற்றொரு பெருஞ்சந்தேகம், அனைவருள்ளத்திலும் பதிந்து கிடப்பதாக அறிகிறேன். அதாவது நத்தமன்னர், மலையமன்னர், சுருதி மன்னர் என்று எழுதுவானேன்? நத்த மன்னர் முன்னின்று காரியங்களைச் செய்வதனால் அவர்கள் உயர்

வென்று கருதி அங்ஙனம் வரைகின்றனரோ? என்று இன்னோரன்ன பிற ஐயங்களே இதுபோழ்து சில பார்க்கவ குலத்தலைவர்கள் எண்ணத்தை ஈர்த்து வருகிறது. மேற்கூறிய முப்பிரிவினருள்ளும் எவரும் உயர்ந்தவரென்றோ அல்லது தாழ்ந்தவரென்றோ பெரும் பான்மையோர் கருதுகின்றாரில்லை. பின்னை ஏன் நத்த மன்னரை முதலில் குறிப்பிடுதல் வேண்டும் என்று மலைய மன்னர் கேட்கின்றார். சுருதி மன்னர் என்று ஏன் முன்னே இருத்தல் கூடாதென்று சுருதி மன்னர் வினவுகின்றார். எதுவும் முன்னே பின்னே இருப்பது குறித்து என் போன்றார்க்கு ஆக்ஷேபணையில்லை. ஆகவே, நன்றாய் ஆலோசித்து ஜனத்தொகைக்கு ஏறறவாறு குறிப்பிடுவதென்று முடிவு செய்து, அங்ஙனமே வழங்கியும், எழுதியும் வருகின்றனரென்பதைத் தெரிவித்துக்கொண்டு, இனி மீது இத்தகைய அல்ப விவகாரங்களிற் ஐயங்கொள்ளாது முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்ய முன் வருமாறு குலாபிமானிகளைப் பன்முறையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

சென்னை தொழிலாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

தொழிலாள சகோதரர்களே!

நீங்கள் பல வருஷங்களாக மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கிடையே உங்கள் வாழ்க்கையை மிகவும் தைரியமாய் நடத்தி வந்திருக்கின்றீர்கள் என்பதையும், சமீபத்தில் நீங்கள் மிகவும் ஒற்றுமையாய் உங்கள் சங்கத்தில் சேர்ந்து உற்சாகங் காட்டி வருகின்றீர்கள் என்பதையும், முன் சில சமயங்களில் ஒரே இராஜீயக் கொள்கைகளைக் கைக்கொண்ட ஒருகட்சியாருக்கு உங்களிற் சிலர் உதவியாயிருந்து வந்ததையும், தற்பொழுது அதை கைவிட்டு எந்த இராஜீயக் கட்சியாரும் உங்கள் நலத்திற்காப் பேசவும், பாடுபடவும் உங்கள் சங்கத்திற்கு வரலாமென்பதையும், எந்த இராஜீயக் கட்சியிலும் நீங்கள் சேராது பொதுவாயிருந்து உங்கள் நலன் ஒன்றையே கருதி கருமஞ் செய்வதையும் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷமடைகிறேன்.

சீர்திருத்தம் வந்து 6-ஆண்டுகளாயும் உங்களில் ஒருவரும் சட்டசபையில் ஸ்தானம் பெறவில்லை. சமீபத்தில் வரப்போகும் தேர்தலிலாவது ஏன் நீங்கள் சென்னை ராஜதானிக்கே—சிறப்பாய் சென்னைக்கே—ஒரு பிரதிநிதியையாவது நிறுத்தி ஜெயம் பெறக்கூடாது. உங்கள் முன்னேற்றம் தற்பொழுது அதிகாரத்திலிருக்கும் ஜஸ்டிஸ் கட்சியாருக்கும், சுயராஜ்ய கட்சியில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சிக்கும் பொதுவாவது. ஆதலால் சென்னை நகருக்கேற்பட்ட நாலு ஸ்தானங்களில் ஒரு ஸ்தானத்தை தொழிலாளருக்கென்று பிரத்தியேகப்படுத்தி அதற்குத் தாம் போட்டிபோடுவதில்லையென ஜஸ்டிஸ் கட்சியாரும் ஏன் உடன்படக் கூடாது? அப்படி உடன்படுவதுடன் உங்களுடைய பிரதிநிதியின் பெயரையும் தாங்கள் கட்சியினுடைய மூவரின் பெயருடன் சேர்த்து இரு கட்சியாரும் ஏன் உங்களுக்கு தேர்தலில் வெற்றி ஏற்பட பிரசாரஞ் செய்யக்கூடாது? அவசியம் உடன்படவும், பிரசாரம் செய்யவும் ஒப்புக்கொள்ளுவதாக அந்தரங்கச்செய்தி கிடைத்திருக்கிறது.

இனி அந்த ஸ்தானத்தை அடைவதற்கு உங்கள் மகாநாட்டை உடனே கூட்டி, உங்கள் தீர்மானத்தை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். இதில் தவறிவிட்டால் உங்கள் முன்னேற்றத்தை தடுக்க நீங்களே காரணமாவீர்கள். நீங்கள் 1000 கூட்டம் போட்டு பதினாயிரம் தீர்மானங்கள் வெளியில் செய்து, பலனில்லாமல் பறக்க விடுவதைவிட, உங்களில் ஒரு பிரதிநிதி சென்னை சட்டசபையில் நிறைவேற்றும் ஒரே தீர்மானத்தின் மூலமாக அதிக பயனுண்டாகலாம். உங்கள் குறைகளைப் பற்றி சட்டசபையில் கேள்விகள் கேட்டு உலகறியச் செய்யலாம். சீர்திருத்த முடிவில் வரப்போகும் விசாரணைக் கமிட்டியில் உங்கள் சட்டசபை பிரதிநிதி ஸ்தானம் வகித்து, உங்களுடைய நலங்களை பாதுகாத்து, ஓட்டுரிமை பெற்று, சுகமுண்டுபண்ண சௌகரியங்களிருக்கின்றன. இந்தியத் தொழிலாளர்களுக்கே நீங்கள் வழிகாட்டியாவீர்கள். தலைவர்களுடைய நல்லெண்ணங்களைச் சோதிக்கவும் இதுவே நல்ல சந்தர்ப்பம். உடனே விழியுங்கள்! எழுங்கள்!! கிளர்ச்சி செய்யுங்கள்!!! பெரிய பலன் கிடைக்கும். இதே மாதிரி சென்னை கார்ப்பொரேஷனிலும் உங்களில் ஒருவர் ஸ்தானம் பெறுவது சுலபமான காரியமாகிவிடும்.

இதைப்பற்றி இன்னும் விரிவாய் தெரிந்துகொள்ள விரும்பினால் உங்கள் மத்தியில் நான் நேரில் வந்து விபரமாய்க் கூறவும் தயாராய் இருக்கிறேன்.

உங்கள் நலன் நாடும்
தொழிலாளர் நண்பன்,
N. தெண்டபாணி பிள்ளை,
6/99, பவளக்காரத் தெரு, சென்னை.

திருநெறிச் செந்தமிழ்த் திருவிழா.

உலகெலாம் உய்வான்வேண்டி பெருநெறிச் செல்வர்களாகிய நால்வர் அருளிய தேவாரமும் சேந்தான்மார்கள் அருளிய திருவிசைப்பாவும், தமிழ்ச் சித்தராகிய 'திருமூலர் அருளிய திருமந்திரமும், திருவாலவாயுடையார் முதலாக நம்பியாண்டார் நம்பிகள் ஈறாக அருளிய பதினோராம் திருமுறையும்' திருவுடைச் சேக்கிழார் குரிசல் அருளிய திருத்தொண்டர் புராணமுமாகிய இவைகள் சைவத்திருமுறைகளாகப் போற்றப்படுகின்றன. இத்திருமுறைத்திருவிழா தில்லைப்பதியில் சிறப்பாக நடக்க வேண்டுமென்று ஊக்கங்காட்டி உழைப்பவர் திருவாளர் பழனியப்பர். இச்சைவத் திருவாளர் செந்தமிழ் திருநாட்டுத் திருப்பதிகள் தோறும் கால்நடையாகவே சென்று இறைவனைக்கண்டின்புற்றவர். சைவப்பெருநெறிக்கே உடல், பொருள் உயிர் மூன்றையும், உவகையுடன் ஈந்தவர். இவ்வமயம் அழகிய திருச்சிற்றம்பல முடையானுக்கு பால்காவடித் திருத்தொண்டு ஆற்றுபவர். இத்திருவாளர் வரும் கிழமை, கொங்குநாட்டிலுள்ள சைவத்திரு மக்களைக் காண வருகிறார். சைவப்பற்றுள்ள அன்பர்கள் யாவரும் இவருக்கு வேண்டிய உதவி ஆற்றுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

மாசி 23-ந்தேதி
சிவஞான விலாசம்
ஆலமரத்துப்பட்டி

இங்ஙனம்
தண்டமிழ்த்தொண்டர்,
பழனிக்குமாரன்.

'வகுப்புரிமையும் ஒற்றுமையும்'

ஆலமரத்துப்பட்டி ஸ்ரீமான். பழனிக்குமாரன் எழுதியது.

இஞ்ஞான்று நமது செந்தமிழ் திருநாட்டில் ஒற்றுமை என்பதைக்காணோம். ஒத்துழையா இயக்கம் வீறுகொண்டெழுந்த ஞான்று, இருந்த, 'ஒற்றுமை இவ்வமயம் யாண்டுற்றது? நாகபுரிக் கொடிப்போராட்டத்தில் முன்னணியில் திகழ்ந்த நமது அருந்தமிழ் நாடெங்கே? வைக்கத்தில், வாகை-மாலை சூடிய வீரத்தமிழ் நாடே நீ யாண்டுற்றாய்? பீடுமிக்க மாடம்துறையில் மறியலுக்காக ஆயிரக்கணக்கான இளைஞர்களை அருளிய செந்தமிழ் நாடே யாண்டுறைகிறாய்? முற்காலத்துக்காட்டிய வீரத்திற்கு தற்காலம் காட்டிய வீரம் குறைந்ததன்றே. இன்னோரன்ன அருநம் பெருங்குணத்தைக்காட்டிய செந்தமிழ் திருநாட்டில் ஒற்றுமை நிகழாததிற்கு காரணம்யாது என இயல்பாகவே வினா எழுகின்றது, இவ்வினாவிற்கு யாரும் எளிதில் விடை இறுக்கலாம். என்னை! பாழும் சுயராஜ்ஜிய கட்சியாரின் தோற்றமே யாகும். இக்கட்சி தோன்றிராவிட்டால், நியாயக்கட்சி, மிதவாதக் கட்சி, சுயேட்சைக்கட்சி, முதலியகட்சிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்கும், மேற் போந்த கட்சிகள் யாவற்றிற்கும் ஆக்கம், கொடுத்தது சுயராஜ்ஜியக் கட்சியே யாகும்.

முடிவாகக் கூறுமிடத்து நாட்டில் ஒற்றுமையைக் குலைத்தது, சுயராச்சியக்கட்சி என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இதை அரசியல் புலமையும், செந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே பெற்ற 'நவசக்தி' ஆசிரியரும் அடிக்கடி கூறியிருக்கிறார். சுயராஜ்ஜியக்கட்சியும், வீறுகொ

(இத்தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்புசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-ஹு பங்குனி-மீ அ-உ

இதுவா வீரம்? இதுவா வீரமொழி?

நமது நாட்டுப் பத்திரிகைகளில் ஒன்று கூடத்தவறுமல் அதாவது, பிராமணப்பத்திரிகைகள், பிராமணரல்லாத பத்திரிகைகள், பகாதியப்பத்திரிகைகள் ஆகிய அனைத்தும் சுயராஜ்யக்கட்சியினர் சட்ட சபைகளைவிட்டு வெளியேறினதை பெச்சியும், ஆதரித்தும், வெளியேறினதற்கு பண்டித நேரு சொல்லிய காரணங்களை 'பண்டிதரின் வீரமொழிகள்' என மகுட மிட்டும், பிரசுரிக்கின்றன. பிராமணப் பத்திரிகைகளைப்பற்றியோ, அவர்களால் ஆட்கொள்ளப்பட்ட பத்திரிகைகளைப் பற்றியோ, கவலைப்படாது தள்ளி விடினும், மற்றைய சுயேச்சைப் பத்திரிகைகளுக்காவது ஆத்மா உண்டா? இல்லையா? என்பதும், உண்மையை அறிய ஆற்றலுண்டா? இல்லையா? என்பதும், அல்லது எல்லாமிருந்தும் தன் காலில் நிற்கச் சக்தியற்று கூட்டத்தில் கோவிந்தா போட்டுக்கொண்டு காலங்கடத்துகிறார்களாவென்பதும், அல்லது முரட்டு வெள்ளத்தில் நாம் எப்படி எதிர் நீச்சல் நீந்துவது என்று பயந்து பொறுப்பு இழந்து வாழ்கையை நடத்திக்கொண்டு வருகிறார்களா வென்பதும், அல்லது ராஜ தந்திரம் என்றால் சிலர் எதுவேண்டுமானாலும், என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதுபோல நினைத்து அதைப்பின் பற்றுகிறார்களா வென்பதும், அல்லது நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டுகிறவன் பயித்தியக்காரன் ஆவதுபோல், பித்தலாட்ட அரசியல் கூட்டத்திலிருந்து கொண்டு நாம் ஒருவன் மாத்திரம் உண்மை பேசி ஏன் பயித்தியக்காரனாக வேண்டும் என்று பயந்து கொண்டிருக்கிறார்களா வென்பதும், நமக்கு ஒன்றுமே விளங்க வில்லை. இவர்களில் சுயநலத்திற்காகவும் ராஜதந்திரத்திற்காகவும் எழுதுபவர்களைப் பற்றி நாம் ஒரு சிறிதுகூட கவலைப்படவே இல்லை. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இரண்டொரு பத்திரிகைகளை அதாவது சுயநலத்திற்கோ, சுயவாழ்விற்கோ அல்லாமல், பொது நலத்திற்கென்றும் உண்மை வெளியிட்டிற்கென்றும் உழைத்து வருகிறதென்று நாம் கருதியிருக்கும் பத்திரிக்கைகளுக்கு மறுபடியும் ஒருமுறை "வெளியேறி" யதைப்பற்றியும் "வீரமொழி"யைப் பற்றியும் ஞாபகப்படுத்துகிறோம். அதாவது வெளியேறியிருக்கிறவர்கள் ஒவ்வொருவரும் ராஜினமா செய்யாமல் சட்டசபை அங்கத்தினர் என்னும் பதவியை வைத்துக்கொண்டேதான் இருக்கிறார்கள் என்பதையும், இப்பதவியின் செல்வாக்கையும், வெளியில் வந்துவிட்டோம் என்று சொல்லும் தந்திரத்தையும், புரட்டையும் ஆதாரமாய் வைத்துப் பொதுஜனங்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி மறுபடியும் சட்டசபைக்குள் நுழைவதற்காகவே வெளியில் வந்திருக்கிறார்கள் என்பதையும், இதற்காதாரமாக வெளியில் வந்தவர்களில் அனேகம்பேர் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகள் என்று சொல்லப்படுவதையும், காங்கிரஸ் கொள்கை என்று சொல்லப்படுவதையும், நிர்மாணத் திட்டத்தின் தத்துவங்களையும், கொஞ்சங்கூட ஒப்புக்கொள்ளாதவர்களென்பதையும், அதாவது சிலர் பட்டதாரிகளாகவும், சிலர் சர்க்காரின் பல நியமனப் பதவி பெற்றவர்களாகவும், சிலர் கதரில் நம்பிக்கையில்லாதவர்களாகவும், சிலர் தீண்டாமையில் நம்பிக்கையில்லாதவர்களாகவும், சிலர் மதுவிலக்கில் கவலையுள்ளவர்கள்போல் வாயால் மட்டும் பேசிவிட்டு மது உற்பத்தியிலும், மது விற்பனையிலும், மதுபானத்திலும் வாழ்கிறவர்களாகவும் இருப்பதை ஒவ்வொருவரும் நடுநிலைமையிலிருந்து கவனித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

"நேருவின் வீரமொழி" என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறோம்.

பண்டித நேரு கடைசியாய்ச் சொன்னதாவது:—

1. சர்க்காரை நாங்கள் பயமுறுத்தவில்லை.

2. சர்க்காருக்கு மகத்தான அதிகாரங்களுண்டு.

3. சர்க்காரை எதிர்க்கும் பலம் எங்களுக்கில்லை.

4 தேசத்தில் சமூக வேற்றுமையால் ஒற்றுமையில்லை.

5. ஆதலால், சட்ட மறுப்புச் செய்ய எங்களால் ஆகாது.

6. இந்த நிலைமையில் நாங்கள் சட்ட சபையில் இருப்பது பிரயோஜனம் இல்லை.

7. இவ்வளவு பலமுள்ள பெரிய சர்க்காரை ஒழித்து விடும் நோக்கத்துடன் நாங்கள் வெளியேறவில்லை.

8. நாங்கள் ஆசைப் பட்டாலும் அது ஆகிற காரியமும் அல்ல'

9. சர்க்காரை நாங்கள் எவ்வளவு அடி பணிந்து கெஞ்சியும் எங்கள் நோக்கங்களை அடைய முடியவில்லை.

10. அதனாலேயே வெளியே போகிறோம்.

11. வெகு நாளைக்கு முன்னமே நாங்கள் வெளியே போயிருக்கவேண்டும்.

12. சர்க்காரின் தந்திரத்தால் நாங்கள் ஏமாந்து போய் விட்டோம்.

13. இனி நாங்கள் இங்கு இருப்பதில் யாதொரு பிரயோஜனமும் இல்லை.

14. இந்த பொம்மை சபைகளில் இனி எங்களுக்கு வேலை இல்லை.

15. தேசத்தின் மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நாங்கள் வெளியே போகிறோம். என்று சொல்லி இருக்கிறார்.

இந்த தத்துவம்கொண்ட வாக்கியங்களில் எந்த வரியிலாவது, எந்த வார்த்தையிலாவது வீரமிருக்கிறதாவென்பதை கவனித்துப்பார்க்கும்படியும், கோழைத்தனமும், முதுகு காட்டி ஓடுந்தன்மையுமாவது இல்லாமல் இருக்கிறதா? என்பதை மனதறியச் சொல்லும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். பத்திராதிபர்களாக இருப்பவர்கள் தேசத்திற்கு நன்மைசெய்யா விட்டாலும், தேச மக்களை நல்வழிப்படுத்தா விட்டாலும், தேசத் துரோகமும் கொலை பாதகமுமாவது செய்யாமல் இருக்க வேண்டாமா என்று தான் ஆசைப்படுகிறோம். மகாத்மா காந்தியை பின் பற்றுகிறோம், என்று தட்பித்துக்கொள்கிறவர்களை உண்மையில் மகாத்மா காந்தியையே பின் பற்றுகிறார்களா என்று மனதில் கைவைத்துப்பார்க்கும்படிக்கும் பிரார்த்திக்கிறோம்.

நிற்க, மேற்கூறிய பலவாக்கியங்களால் பண்டித நேருவால் வர்ணிக்கப்பட்ட சட்ட சபைகளுக்கு சுயராஜ்யக் கட்சியார் மறுபடியும் எதற்காகப் போகவேண்டும்? பொது ஜனங்களும் எதற்காக இவர்களுக்கு ஓட்டுச் செய்யவேண்டும்? முதலாவது சுயராஜ்யக்கட்சி என்பது எதற்காக நமது நாட்டிலிருக்க வேண்டும்? சட்டசபையாலேயே ஒருகாரியமும் செய்ய முடியாது; சட்ட மறுப்புக்கும் தேசம் தயாராயில்லை; தாங்கள் சட்டசபைகளில் பெருப்பான்மையோராக இருந்து பல தீர்மானங்கள் செய்தும் யாதொரு பலனும் இல்லை, என்று ஆகிவிட்டால், மறுபடியும் சட்டசபையில் புகுவதில் பயன் என்ன? வெளி வருவதில் பயனென்ன? மெஜாரிட்டியாராயிருப்பதில் பயனென்ன? ஆகிய இவைகளைக் கவனித்துப்பார்ப்பார்களானால் உண்மை விளங்காமல் போகாது. பத்திரிகைகள் விஷயம் இப்படி இருந்தாலும், ஆங்காங்கு நடக்கும் பிரசாரங்களின் தன்மையோ வெளியிலெடுத்துச்சொல்வதற்கு கூட வெட்கமாயிருக்கிறது. தேசத்தின் பெயரால் தியாகம்செய்ததாயும், சிறைக்குச் சென்றதாயும் சொல்லப்பட்டவர்களில் பலர், தங்கள் அறியாமையாலும், வயிற்றுக் கொடுமையாலும், சுயநலத்தினாலும், பலஹீனத்தினாலும், கட்டுண்டு இப்போலித் தொண்டுப் பிரசாரத்தில் இறங்கி தேசம் பாழாகும் வண்ணம் பாமர ஜனங்களிடையே பிரசாரம் செய்து வருகிறார்கள் இதைப்பற்றி நாம் மிகுதியும் வருத்தப்படவேண்டியதாயிருந்தாலும், பாமர ஜனங்கள் அடியோடு மூடர்கள் என்று நம்புவதற்கில்லாமல், இப்போலிப் பிரசாரங்கள் நடக்கும் கூட்டங்களிலெல்லாம், கூட்டத்திற்கு வரும் ஜனங்கள் ஏமாந்து கேட்டுக்கொண்டிருக்காமல், பிரசாரர்களின் சூழ்ச்சிகளை அறிந்திருப்பதற்கு ஆதாரமாய் பல கேள்விகள் கேட்பதும், அதற்குப் பதில் சொல்லமுடியாமல் பிரசாரகர்கள் கூட்டத்தை அவசரத்தில் முடித்துக்கொண்டு ஓடுவதும்; கேள்வி கேட்பவர்களுக்கு லஞ்சம் கொடுத்து வாயடக்குவதுமான காரியங்களால் பொது ஜனங்கள் இன்னமும் சரியானபடி ஏமாறவில்லை என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

———

பி. வரதராஜுலு நாயுடு.

பிராமணர்களின் கொடுமையும், குறும்புத்தனமும்.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

மாயவரம் முனிசிபாலிட்டியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்தபொழுது, சில பிராமணர்கள் அதை எதிர்த்தார்கள். இவர்கள் எதிர்ப்பை லட்சியம் செய்து, மற்ற கவுன்சிலர்கள் ஒரேயடியாய் நிறைவேற்றி விட்டார்கள். 'தங்கள் ஆசைப்படியே பலிக்கவில்லை என்று நினைத்தபடி பிராமணர்கள் அதோடு சும்மாயிராமல், அரசாங்கத்தாருக்கு அடியில் கண்டபடி தந்தி கொடுத்தார்கள். அதாவது:— "மாயவரம் முனிசிபாலிட்டியார் டாக்டர் வரதராஜுலு நாயுடுவுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தால், மாயவரத்தில் சமாதானத்திற்கு மிகவும் பங்கம் வரும். ஆதலால் அரசாங்கத்தார் இத்தீர்மானத்தை நிராகரித்து விடவேண்டும்," என்று கண்டிருந்ததாம். இது எவ்வளவு அயோக்கியத்தனமான காரியம் என்பதை வாசகர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். ஸ்ரீமான்கள். சீனிவாசய்யங்கார் கல்யாணசுந்தர முதலியார், ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்களுக்கு வாசித்துக்கொடுக்கும் உபசாரப் பத்திரங்கள் சமாதானத்தை விளைவிக்கும், டாக்டர் நாயுடுவுக்கு வாசித்துக் கொடுக்கும் உபசாரப்பத்திரம் சமாதான பங்கம் விளைவிக்கும் என்றால், அய்யங்கார், ஆசாரியார், முதலியார் முதலானவர்களிடம் உள்ள எந்த குணம் டாக்டர் நாயுடுவிடம் இல்லை. அல்லது அவர்களிடமில்லாத எந்த குணம் டாக்டர் நாயுடுவிடம் இருக்கிறது. எந்தவிதத்தில் அம்மூவருக்கும் டாக்டர் நாயுடு இளைத்தவர். பின்னும் சிற்சில சமயங்களில் டாக்டர் நாயுடு அவர்கள் சில பிராமணர்களின் அயோக்கியத்தனத்தைப் பற்றிச்சொன்ன போதிலும், மறுசமயத்திலேயே அயோக்கியனாயிருந்தாலும் தேசிய வர்த்தியாயிருந்தால் ஓட்டு கொடுங்கள் என்று கூடசொல்லி அயோக்கியர்களுக்கெல்லாம் வேஷம் போட்டுக்கொள்ள ஒரு போக்கிடமும் காட்டியிருக்கிறார். அதோடு ஸ்ரீமான் திரு. வி. க. முதலியாரவர்களைப்போலவே இவரும் ஒரு சமயத்தில் ஒரு மகாநாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம் பிரேரேபித்திருந்தாலும் இப்பொழுது பிராமணர்களுக்கு அனுகூலமாக வகுப்பு வாரிபிரதிநிதித்துவம் வேண்டாமென்கிறார். இவ்வளவு நன்றி செய்தவர்களிடமும் நமது பிராமணர்கள் இம்மாதிரி நடந்துகொள்வார்களானால் இப்பிராமணர்களின் நன்றியறிதலை என்னென்று சொல்வது. இதே டாக்டர் நாயுடுவை இந்த பிராமணக்கூட்டத்தார் வண்டியில் வைத்து இழுக்கவில்லையா? தென்னாட்டுத்தலைவர் என்று சொல்லவில்லையா? அவர் படத்தை ஆசாரத்திலும் படுக்கை இடத்திலும்; பூஜை இடத்திலும் வைத்திருக்கவில்லையா? இப்பொழுது ஏன் அவர் பேரில் இவ்வளவு வெறுப்பு? எந்தப்பத்திரிகையாவது இப்பிராமணர்களின் நடத்தையைப் பற்றி ஒரு வார்த்தையாவது எழுதினதா? இம்மாதிரி ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காருக்கோ ராஜகோபாலாச்சாரிக்கோ உபசாரப்பத்திரம் கூடாது என்று இரண்டு பிராமணரல்லாத கவுன்சிலர்கள் ஏதாவது வாயைத்திறந்திருந்தால் இந்த தேசிய பத்திரிகைகள் என்று சொல்லும் பித்தலாட்டப் பத்திரிகைகளும் அவர்களால் வயிறு வளர்க்கும் தொண்டர்களும் இப்பிராமணரல்லாதார் குடியை அடியோடு கெடுப்பதற்கல்லவா வகை தேடி இருப்பார்கள். வெள்ளைக்காரர்கள் எப்படி தங்கள் இனத்தாரை யாராவது ஒரு இந்தியர் தொட்டுவிட்டால் அந்த சர்க்காரோடு யுத்தம் என்று ஆக்கி ராணுவச் சட்டத்தை அமுலில் கொண்டுவந்து விடுவதும், யாராவது ஒரு வெள்ளைக்காரன் இந்தியனைக் கொன்றுவிட்டால் அது அசால்டாகி 10-ரூ அபராதத்தோடு போய் விடுகிறதோ. அதுபோலவே, பிராமணரல்லாதார் யாராவது பிராமணர்களை ஏதாவது சொல்லிவிட்டால் அது தேசத் துரோகமாகி அவர்களை அடியோடு ஒழிக்கப்பார்ப்பதும், பிராமணரல்லாதாரை பிராமணர் என்ன செய்தாலும் அது தேச சேவையும் ஆகி விடுகிறது. இவர்கள் போக்கியதைப் பார்த்தால் வெள்ளைக்காரர் ஆயிரமடங்கு யோக்கியர்கள் என்று நெருப்பின்மேல் நின்று சொன்னாலும் கால் வேகாது என்று கூட சொல்லலாம். கேவலம் இந்த உபசாரப் பத்திரத்தைப்பற்றி நமக்கு கவலை இல்லை; அதற்கு மதிப்பிருந்த முட்டாள் அபிப்பிராயம் வெகு நாட்களுக்கு முன்னே போய்விட்டது. மகாத்மாவுக்கும் உபசாரப் பத்திரம், அன்னவரைக் கொலை செய்தவர்களுக்கும் தான் உபசாரப் பத்திரம், யோக்கியனுக்கும் உபசாரப்பத்திரம், திருடனுக்கும் உபசாரப்பத்திரம். உபசாரப்பத்திரம் வாங்க யோக்கியதையில்லாதவன் இனி நமது இந்தியாவில் இல்லை என்பதே நமது அபிப்பிராயம். ஆதலால் அதைப்பற்றி கவலையில்லை. டாக்டர் நாயுடுவும் இதைப் பிரதானமாய் எண்ணியிருக்க மாட்டார். அவர் வீட்டு சமயலறைச் சுவர்கள் பூராவும் சட்டம் போட்ட உபசாரப் படங்களாலேயே மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பிராமணப்பான்மையை இன்னும் நமது பாமர ஜனங்கள் அறியவில்லையே என்றுதான் நாம் விசனிக்கிறோம். தேசத்திற்காக மூன்று முறை ஜெயிலுக்கு போனார்; கேப்பை மாவு அஸ்ரத்தார்; ஸ்ரீமான் சீனிவாச அய்யங்காரைப்போலவே. பதினாயிரக்கணக்காக ரூபாய் செலவு செய்தார்; ஆனால் சீனிவாசய்யங்காராவது கட்சிக்காரன் பணத்தில் தேசக்காகப்போய் உபசாரப்பத்திரம் பெற்று வருவார். இவர் தன் சொந்தப்பணத்தையே செலவு செய்துகொண்டு போய் உபசாரப்பத்திரம் பெறுவார். இதிலிருந்து நாம் நினைக்கவேண்டியது என்னவென்றால், பிராமணர்களின் பேராசைக்கு விரோதமான ஒரு சிறு காரியத்தையாவது எந்த பிராமணரல்லாதராயினும் செய்ய நினைத்து விட்டால் அவர் குடியைக்கெடுக்க இப்பிராமணர்கள் கொஞ்சமும் பயப்படமாட்டார்கள் என்பதும், இதற்குப் பயந்துகொண்டே தான் நமது பிராமணரல்லாதார் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும் எவ்வளவு பணக்காரராக இருந்தாலும் பிராமணர்களைக் கண்டால் நடுங்குகிறார்களென்பதும், அவர்கள் வாலைப்பிடித்துக்கொண்டு திரிகிறார்கள் என்பதும் விளங்குகிறது. படித்தவர்களும் பணக்காரர்களுமே இப்படி இருந்தால், வெறும் ஆசாமிகள் சங்கதியைப்பற்றி கேட்கவும் வேண்டுமா! பிராமணரல்லாதார் நிலை பரிதாபம்!! பரிதாபம்!!!

கோயமுத்தூர்

வரி கொடுப்போர் சங்கம்.

கோயமுத்தூரில் சில பிராமண தந்திரிகள் பிராமணரல்லாதார்களாகிய நகர சபைத்தலைவர்கள் செல்வாக்கைக் காங்கிரஸ் மகாத்மா என்ற ஆயுதத்தால் துலைத்துவிட எண்ணி 15-3-26 தேதி ஒவ்வொரு வார்டிலும் சங்கம் ஸ்தாபித்து தங்களுக்கு வேண்டியவர்களை அச்சங்கத்தில் நியமனம் செய்து வைக்க எண்ணி, 13-வது வார்டில் முதல் முதல் மீட்டிங்கு போட்டனர். சரியானபடி நோட்டீஸ் பப்ளிக் செய்பவுமில்லை: இதையறிந்த கவுன்சிலர் ஸ்ரீமான் அருணாசலம் செட்டியார், ஸ்ரீமான் பழனிசாமி நாயுடு, ஸ்ரீமான் ராமச்சந்திரஞ் செட்டியார், தெப் மண்டி ஸ்ரீமான் பி. கிருஷ்ணசாமி பிள்ளை முதலியவர்கள் கூட்டத்திற்குள் வந்து பிராமணர்கள் எண்ணத்தை அடியோடு துலைத்து பிராமணரல்லாதார் கூட்டத்தினர்களையே அச் சங்கத்திற்கு உத்தியோகஸ்தராக தேர்ந்தெடுத்து லிஸ்ட்டு தயார்செய்து கொண்டனர். சங்கத்தின் அவசியத்தைப்பற்றி பேச ஸ்ரீமான் மகாலிங்கையர் அனுமதி கேட்டார். ஸ்ரீமான் பழனிசாமி நாயுடு அவர்கள் 14-வது வார்டு வரி செலுத்துவோர்களாகிய எங்களுக்கு தங்கள் உபதேசம் தேவையில்லையென்று சொல்லிவிட்டார். அவர் உட்கார்ந்து விட்டார். ஆபீஸ்பேரர்ஸ் லிஸ்ட்டை கடைசியாக வாசித்தார்கள். உடனே அங்குள்ள பிராமணர்கள் கிணறு வெட்ட போய் பூதம் புறப்பட்டதே என்று திகைத்து வெளியேறினர்கள், பிராமணரல்லாதார்கள் சங்கம் ஸ்தாபித்து விட்டனர்

V. K. C.

ஹிந்து மஹாசபை

ஹிந்து மகாசபையைப் பற்றி நாம் பலதடவைகளில் அது வருணாசிரம சபை என்றும், இந்துமுஸ்லீம் ஒற்றுமைக்கு விரோதமான சபை என்றும், பிராமணாதிக்கத்திற்காக உழைக்கும் சபை என்றும். எழுதி வந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். சில நண்பர்களுக்கு இவ்வாறு எழுதியதைப்பற்றி மன வருத்தம் ஏற்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால், இப்பொழுது வரவர அதன் யோக்கியதை நாம் எழுதியபடியே முழுவதும் வெளியாகிவிட்டது. அதாவது விதவாவிவாகத் தீர்மானம் இந்து மஹாசபை மஹாநாட்டின் விஷயாலோசனை கமிட்டியில் நிறைவேறினதும், அதன் அக்கிராசனராகிய பண்டித மாளவியா மகாநாட்டுப் பந்தல் பக்கம் கூட எட்டிப்பார்க்கமாட்டேனென்று அத்தீர்மானத்திற்கு ஆதாரமாயிருந்தவர்களை விரட்டித் தீர்மானத்தையே மகா நாட்டிற்குள் கொண்டு வரவிடாமல் நசுக்கி விட்டார். பின்னர் தீண்டாமையைப் பற்றின தீர்மானம் மஹாநாட்டில் நிறைவேறினவுடன் சபையில் உள்ளவர்களெல்லாம் எழுந்து ஓடிப்போய் விட்டார்களாம். ஆதலால் தலைவர்கள் எழுந்துபோனவர்களை அழைத்து வந்து இத்தீர்மானத்தின் ரகசியத்தை எடுத்துரைத்து; அதாவது இத்தீர்மானத்தால் [illegible] டாமை ஒழியத்தகுந்த [illegible] விதமான ஏற்பாடும் நாங்கள் [illegible] விடவில்லை. பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக வேண்டி ஏதோ தீண்டாமையில் அக்கறையுள்ளவர்கள் போல காட்டுவதற்காகச் செய்யப்பட்டதே யொழிய வேறல்ல என்று பொருள்படும்படி பேசி அத்தீர்மானத்தில் யாதொரு சத்துமில்லை என்கிற ரகசியத்தைவெளிக்காட்டி, அதுவும் ஏற்பாடு செய்யுங்களென்று கேட்டுக்கொள்கிறோமே யல்லாமல் வேறில்லை, உங்களுக்கு இஷ்டமிருந்தால் செய்யுங்கள், இல்லாவிட்டால் வேண்டாம். வெளிப்பிரசாரத்திற்கு இம்மாதிரி தீர்மானங்களெல்லாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது, காரியத்தில் செய்யவில்லையானால் பரவாயில்லை, அது உங்களிஷ்டம்; என்று சொன்ன பிறகுகூட வெளியே போனவர்கள் போயே தீர்ந்தார்களாம். இதோடு ஹிந்து மஹா சபையின் தீர்மானங்களையும், உரிமைகளையும் காப்பாற்றுவதாக வாக்களிப்பவர்களுக்கு மாத்திரமே ஓட்டுக்கிடைக்கும்படி பிரசாரம்செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்களாம். இதிலிருந்து அறியக்கிடப்பதென்னவென்றால் விதவா விவாகத்தையும், தீண்டாமை ஒழிப்பதையும் ஒப்புக்கொள்கிறவர்களுக்கு இந்து மஹாசபை எதிர் பிரசாரம் செய்யும் என்பதும், மகாத்மா காந்தியடிகளே சட்டசபைக்கு நிற்பினும் அவருக்குக்கூட ஓட்டுக்கொடுக்கக்கூடாதென்றே தான் சொல்லும். இதுவே அதன் கொள்கையுமாகும், என்பதை இப்பொழுதாவது வாசகர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறோம்.

சர்க்கரை யந்திரசாலை திறப்புவிழா.

பள்ளபாளையம் ஐக்கியச் சங்கக் கரும்பாலையை கனம் சென்னை ஐக்கியரிஜிஸ்டிரார் கிரேயவர்கள் 15—2—26 தேதி திறந்து வைத்தார். அநேகம் பெரியோர்கள் விஜயம் செய்திருந்தனர். துரையவர்களுக்கு பொட்லர்களைக்கொண்டு ஒரு அந்நிய நாட்டு விருந்து நடத்தப்பட்டது. அது சுமார் 10 பேர்களுக்குமட்டும் தயார்செய்யப்பட்டது. சைவச் சாப்பாடும் பிரதியேகமாகத் தயார் செய்திருந்தனர். துரையவர்கள் சாப்பிடப் போகும்போது கூடவே சில பிராமண நண்பர்களும் உள்ளே சென்று உணவருந்திவிட்டனர். பிராமணர்கள் அங்கு வரமாட்டார்களென்று சொற்பமாகவே தயாரித்திருந்ததினால் போதாமற் போயிற்று. இந்த விருந்து நடத்தி வைத்த ஸ்ரீமான். சுருட்டணைத்தேவரவர்கள் பிராமணர்கள் அங்கு சாப்பிட மாட்டார்களென்று ஏமாந்துபோய்விட்டார். ஆகையால் அவர்களுக்கு சமாதானம் சொல்லப்பட்டது. துரையவர்களுடன் உணவு கொள்ள வேண்டியவர்களில் சிலர் சைவச்சாப்பாடு ஏற்றுக்கொண்டனர். இத்தகைய சமத்துவமே நம்தேசத்தின் ஊர்ப்பிணக்கையும் சமயப்பிணக்கையும் தீர்த்தெறிய சரியான ஆயுதமென நம்புகிறேன்.

P. கிருஷ்ண நாயுடு
சிங்கா நல்லூர்.

தூத்துக்குடி "மகாத்மா காந்தியடிகள் கதர்ச்சாலை"

இஃது இவ்வரிய பெயரால் தூத்துக்குடி, ரங்கநாதபுரத்தெருவிலுள்ள "மகாத்மா காந்தி கைங்கர்ய நிதிச்சங்க நிலையத்"தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (14–3–26 பங்குனி-மீ க-வ) காலை நிறுவப்பட்டது. இக்கதர்ச்சாலைக்கு ஈரோடு தமிழ்நாடு காங்கிரஸ் கதர் வஸ்திராலயத்திலிருந்து இவ்வாரத்தில் சில நூறு ரூபாய்களுக்கு கதராடை வந்திருக்கிறது. இதைநிர்வகிக்கும்பொறுப்பை நகர நூல் நூற்போர் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் தி. இராமசாமி பிள்ளை அவர்கள் ஏற்றுநடத்துவது பாராட்டத்தக்கது. உள்ளூர் வாசிகள் இங்கேயே ஆடை வாங்கி அணிந்து நிர்வகிப்பவரை ஊக்குவிக்கவும். இக்கதர்ச்சாலைக்கு காலஞ்சென்ற ஸ்ரீமான் அ. மா. லட்சுமணபிள்ளை மகன் நாராயணன் அவர்கள் நூற்றிபதினைந்து ரூபாய்கள் கொடுத்து உதவியது யாவராலும் பின்பற்றத்தக்கது என்று கதர்ச்சாலைக்காரியதரிசி அறிவிக்கிறார்.

ஆதி திராவிடர் சங்கம் மிக்கேல் பட்டி

இச்சங்கம், திங்கள் தோறும் இரண்டாம் வாரத்தில் தொடக்கக் கல்வி ஆசிரியர்கட்கும், ஏனைய ஆதித்திராவிடர்கட்கும் பயன் படுமாறு, சுமார் ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இத்திங்களில் வழக்கம்போல் கூடிய இச்சங்கம், தஞ்சை தாலூகா நாட்டாண்மைக் கழகத்தலைவரும், உயரிய நீதிமன்றத்தின் வழக்கறிஞரும், கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவருமாகிய, திருவாளர். த. வே. உமா மகேஸ்வரம் பிள்ளை, பி. ஏ. பி. எல். அவர்கள் திருக்காட்டுப்பள்ளிக்கு ஓர் வேலையாக வந்திருப்பதை யோர்ந்து, அவர்கள் ஆதிதிராவிடரின் முன்னேற்றத்திற்காய் மிக்க அவாவுடன் உழைப்பவர் என்பது யாவருக்கும் முன்னமே தெரியுமாதலால் இதற்குத் தலைமை வகித்தருளவேண்டவே, தமது அவகாச மின்மையை அறிந்தும் அன்புடன் உறுதி மொழிந்தார்கள். அவர்களுடன் ஆசிரியர் சங்கம் ஒங்குதற் பொருட்டு அவ்வப்போதான நன்றி புரிந்து வருபவரும், தஞ்சை நாட்டாண்மைக் கழகப் பள்ளிக்கூடங்களின் மேற்பார்வையாளருமாகிய திருவாளர் டி. வி. இரத்தினசாமி பிள்ளையவர்களும், மற்றும் சில கனவான்களும் இங்கு விஜயம் செய்தனர்.

இக்கூட்டம் இத்திங்கள் பதினான்காம் நாள் (14-3-26) ஞாயிறு அன்று மாலை சுமார் இருபத்தைந்து நாழிகைக்கு 4-மணிக்கு திருக்காட்டுப்பள்ளி போர்டு ஆதிதிராவிட பள்ளிக்கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இறைவர் வாழ்த்துடன் தொடங்கிய இச்சங்கத்தின் அவைத்தலைவராய் அமைந்த, திருவாளர் பிள்ளையவர்கள் தமது முன்னுரையில், ஆதித்திராவிடரின் முன்னேற்றத்திற்கு மிக்கஅவசியமானமுறைபாடுகளை தெள்ளிய நடையிற் சொற்பொழிவாற்றி அமைந்தனர். பின்னர் சங்க அமைச்சரும் இப்பள்ளியின் தலைமை ஆசிரியருமாகிய, எ. சவரிநாயகம் உபாத்தியாயர் அவர்களின் நன்முயற்சியால் தலைவர் அவர்கட்கோர் உபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டது. இதன்பின், திருச்சினம்பூண்டி போர்டு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராகிய எம். அடைக்கலச்சாமிப்புலவர் அவர்களால் 'ஆதித்திராவிடரின் அல்லல்கள்' என்னும் விஷயமாய் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

இறுதியாய் அவைத்தலைவர் அவர்களின் அன்பு நிறைந்த முடிவுரை கூறி, அரசர் வாழ்த்துப் பாடி, கூட்டம் முடிவெய்தியது.

இச்சங்கம் மங்கா தொளிர முயன்று வருபவரும், பவனமங்கலம் போர்டு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியரும், இச்சங்கத்தலைவருமான ஸ்ரீமான். ஏ. அந்தோனிமுத்து உபாத்தியாயர் அவர்களின் முயற்சி பாராட்டற்பாலதே. இச்சங்கம் நீடுவாழ இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

அ. சவரிநாயகம், சங்க அமைச்சர்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

ண்டெழவேண்டும்; ஒற்றுமையும் நிகழவேண்டும் என விரும்புவது பகற்கனவாகவே முடியும். என்னை? செல்வாக்குப் பெற்ற மரபினர், செல்வாக்குப் பெறாத மரபினர்களை, முன்னேற வொட்டாமல் தடுப்பார்கள். பின்னை ஒருவருக்கொருவர் கலாம் விளைவித்து, ஒற்றுமையைக் கெடுத்து விடுவார்கள். ஆதலால் சட்டசபை, முனிசிபாலிட்டி, காங்கிரஸ் முதலிய இடங்களில் ஒவ்வொரு மரபினருக்கும், தங்கள் மக்கட்டொகைக் கேற்றபடி ஸ்தானங்கள் நிறுவி விட்டால், ஒற்றுமை, ஏற்பட்டுவிடும். பின்னை; ஒவ்வொரு மரபினரும் அந்நிய ஆட்சியில் உள்ள குறைகளை செல்வதில் ஓர்ந்து, தன்னாட்சி பெறுவதற்கு ஒற்றுமையாகச் சேர்ந்து தீவிரப்போர் நடத்துவார்கள். அவ்வமயம் 'தன்னாட்சி' எளிதில் பெறலாம். "வகுப்புரிமையை எண்ணாமல் மேனாட்டு முறைப்படி கட்சிகளை நிறுவி ஒற்றுமையாய் தீவிரப்போர் நடத்தவேண்டும். வகுப்புரிமையினால் ஒற்றுமை நிகழாது அதனால பிணக்கே யாண்டும் பொலியும்" என சிலஅரசியல் வாதிகள் அறைகின்றார்கள். இவர்கள் கூற்று சிறிதும் பொருந்தாது என்னை? மேனாடு, சுயேச்சையுள்ள நாடு; நமது நாடு அடிமை நாடு, என்பதை முதலில் உய்த்துணரவேண்டும்.

சுயேச்சையுள்ள நாட்டில் அரசியில் கட்சியில் நாடு நலம்பெறும். அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்ட நாட்டில், அரசியல் கட்சி வகுத்தால் முன்னேற்றமடைந்த வகுப்பினர் மாத்திரம் நலம் பெறுவார்கள்; ஏனைய மரபினர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள். பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றுவதற்குமுன் காங்கிரசும் அரசியல் நிர்வாகமும் எம்மரபினர் வசம் இருந்தது என்பதைக் கவனித்தால், நன்கு விளங்கிவிடும். முன்னேற்றமடைந்த வகுப்பினர் ஏனைய வகுப்பினர்க்கு செய்த நன்மை யாது? மகாத்மா காந்தி அடிகள் காங்கிரஸில் புகுந்ததிலிருந்து, முன்னேற்றமடைந்த வகுப்பினராகிய பிராமணர்களுக்கு, பயம் ஏற்பட்டுவிட்டது. காந்தி அடிகள் பாமரமக்கள் எல்லோரையும் காங்கிரஸில் சேர்த்து அவர்களுக்கு சிறிது அரசியல் ஞானத்தை அருளி அரும்பாடுபட்டு வெற்றியுமடைந்தார். காந்தியடிகள் தோன்றி இராவிட்டால் பாமர ஜனங்களுக்கு சட்ட சபை என்பது யாது? காங்கிரஸ் என்பது யாது? என்பதே தெரியாது; பாமரமக்கள் முன்னேற்றமடைவது பிராமணர்களுக்குப் பெரிதும் இடைஞ்சலாகவே முடியும். அன்றியும், பிராமணரல்லாதார்கள் சட்டசபைகளைக் கைப்பற்றிய போது பிராமணர்கள் காங்கிரசின் கொள்கைக்கிணங்க சட்டசபையைக் கவனியாமல் இருந்ததினால், இந்த ஆறு ஆண்டுகளாக பிராமணர்கள் முன்னேற்றம் தடைபட்டு பிராமணரல்லாதார் சிறிது முன்னேற்றமடைந்தார்கள்.

இதைக் கண்டுதான் தற்காலம் பிராமணர்கள் சுயராஜ்ஜியகட்சி, காங்கிரஸ், என்ற போர்வையை மூடிக்கொண்டு சட்டசபைக்குப் போக அரும்பாடுபடுகிறார்கள். சில பிராமணரல்லாத கனவான்களும் இவர்களின் உள்ளக்கிடக்கையை உணர்ந்தோ உணராமலோ;... அவர்களை பின்பற்றித் திரிகின்றார்கள்.

வகுப்புரிமை வேண்டுமென்று கேட்டால் பிராமணர்களுக்கு வரும் இழுக்கென்ன? இதை ஏன் இவர்கள் எதிர்க்கிறார்கள்? தாங்கள் எதிர்த்தால் தங்கள் நாடக நடிப்பை பிராமணரல்லாதார் கண்டுகொள்வார்கள் என்று சில பிராமணரல்லாதாரைக் கொண்டே எதிர்க்கச்செய்வதின் நோக்கமென்னை? என்பதை ஒவ்வொரு பிராமணரல்லாரும் நன்கு சிந்திக்கவேண்டுகின்றேன். உண்மையாகவே பிராமணர்கள் தன்னாட்சி வேண்டுமெனக் கூறுகின்றார்களா? உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசுகிறார்களா? என அடியேனுக்கு ஐயம் நிகழாநிற்கின்றது. 'தன்னாட்சி' நாம் இன்று பெற்றால் நாளை பிராமணர் ஆக்கம் போய்விடும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தன்னாட்சி பெறுவதற்கு ஒத்துழையாமையே, சிறந்த வழியெனக்கண்ட பிராமணர்கள் ஏன் சட்டசபைக்குப் போக முயர்ச்சிக்கிறார்கள் என்பதை நன்கு கவனிக்கவேண்டும். காங்கிரசில், உத்தியோகம், ஏற்கும் கட்சி, உத்தியோகம் ஏற்காத கட்சி என ஏன் பிரியவேண்டும்.?

இவையெல்லாம், பிராமணரல்லாதாரை ஏமாற்றும் கொள்கை என்றே புலனாகின்றது. பிரிட்டிஷ் ஆட்சியில் கிடைக்கும் நன்மைகள் தன்னாட்சியில், கிட்டாது.

பிராமணர்களின் தற்கால நிலைமை சீரும் சிறப்புடனேயே பொலிகின்றது; சுயராஜ்ஜியத்தில் இவ்வளவு உரிமை அடைய முடியாது. சென்ற பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைமைக்கும், தற்கால நிலைமைக்கும் வேறுபாடு பெரிதுமுண்டு. இன்னும் சில ஆண்டுகளில் பிராமணர்கள் சுயராஜ்ஜியப் போரில் கலந்து கொள்ள மாட்டார்கள் போல் தோன்றுகின்றது. ஆங்கில ஆட்சியே நிலைத்திருக்க வேண்டுமெனக் கோருவார்கள். இவ்வெண்ணம் சில தென் இந்தியப் பிராமணர்களிடம் உதயமாகியிருக்கிறது. இதை வலியுறுத்தியே மேனாட்டில் வெளியாகும் ஒரு பத்திரிக்கையில், தென் இந்தியப் பிராமணர் ஒருவர் ஓர்கட்டுரை எழுதியிருக்கிறார். அக்கட்டுரையின் சாரம், நவசக்தியின், 'இடியேற்றில்' வெளிவந்திருப்பதை ஒவ்வோர் பிராமணரல்லாதாரும் நன்கு கவனிக்க வேண்டும்.

பிராமணரும்—பிராமணரல்லாதாரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டினால், வகுப்புரிமையை பிராமணர் ஒப்புக்கொள்ள வேண்டும். பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு தடையாய் இருக்கக்கூடாது; தங்களால் எவ்வளவு உதவி செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்யவேண்டும்; இல்லையேல், ஒருவருக்கொருவர் பூசலிட்டு, பிராமணர்களை கீழ்நிலைக்கு கொண்டுவந்து விடுவார்கள்.

ஆகையால். செந்தமிழ் நாட்டில் பிராமணர், பிராமணரல்லாதார், ஆதிதிராவிடர் என்ற மூன்று வகுப்பாருக்கும் ஸ்தானங்களை பிரித்து ஒற்றுமை உண்டாக்கவேண்டும். இதில் ஒன்று கவனிக்கவேண்டுகின்றேன். பிராமணரல்லாதாரில் கணக்கில்லாத வகுப்புஉண்டாக்கி பிரிந்து நிற்கிறார்கள். இவர்கள் யாவரும் 'தமிழர்' என்ற முறையில் ஒன்று சேரவேண்டுகின்றேன்.

எல்லோரும் வாருங்கள் சிரிக்கலாம்.

வரும்போது சிரிப்பதற்கென்றே. கிராமபோனில் ஒரு நண்பனிருக்கிறார்; அவரையும் கூட்டி வாருங்கள்; என்ன விசேஷம்? சொல்கிறேன். இந்தியா சட்டசபையில் உள்ள சுயராஜ்யக்கக்ஷியாரும், மாகாண்சட்டசபையிலுள்ள சுயராஜ்யக்கட்சியாரும் வெளியேறி விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து சில வெளவால் கட்சியாரும் வந்திருக்கிறார்கள், அதிலும் காங்கிரசுக்கும் எனக்கும் . சம்பந்தமில்லை; கதருக்கும் எனக்கும் சம்பந்தமில்லையென்று சொன்னவர்களும் வெளியேறியிருக்கிறார்கள். ஏன்? கான்பூர் காங்கிரசு கட்டளையிட்டு விட்டதா! சபாஷ்!! என்னே காங்கிரசின் பேரில் பக்தி! ஹா; ஹா; ஹா; ஹா; இப்பேதைய காங்கிரசும் சுயராஜ்யக்கட்சிக் கூட்டந்தானே! உண்மை காங்கிரசு மூவகைப் பகிஷ்காரம் ஒத்துழையாமை கட்டளையிட்ட காலத்தில் ஏன் காங்கிரசுக் கட்டளையைப் பின்பற்ற வில்லையென்று தயவு செய்து யாரும் கேட்காதீர்கள். ஏனெனில் அது பிரம்ம ரகசியம். வெளியேறிய காலத்தில் அவர்கள் பிரசங்கங்களைப் படிப்பவர்கள் வயிறு வெடிக்க சிரிப்பார்கள்; வோட்டர்களை அவமானப்படுத்த வேறென்ன வேண்டும்? இது வரை எவ்வளவோ பார்த்தார்களாம்; ஒன்றும் கவர்ன்மெண்டு வழிக்கு வரவில்லையாம்; ஆகையால் வெளியே வந்து ஓட்டர்களிடம் செல்லி மறுபடியும் தங்களைத் தெரிந்தெடுக்கும்படி செய்து மீண்டும் சட்டசபைக்குப் போய் சுயராஜ்ஜியம் வாங்கிவருகிறார்களாம். இவர்கள் ஓட்டர்களை என்னவென்று நினைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. பொதுத்தேர்தல் நடை பெறும் வரை உல்லாசமாய் படி, பத்தா முதலியவைகளைப் பெற்று ஆனந்தமாயிருந்து விட்டு, சட்டசபைகள் கலைகிறகாலத்தில், நாங்கள் வெளியேறுகிறோம் என்று சொல்வது எவ்வளவு வஞ்சகம்? அரசியல்சிறையாளர்களை விடுதலை செய்யும்படியோ, விசாரணைக்குக் கொண்டுவரும் படியோ, தீர்மானம் நிறைவேற்றி அதன்படி கவர்ன்மெண்டார் செய்யாத அந்த நிமிஷத்தில் இவ்வீரர்கள் ஏன் வெளிவரவில்லை? இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் கடந்த 30 மாதங்களில் கிடைத்தும் ஏன் வெளிவரவில்லை? இப்போதாகிலும் மறுபடியும் சட்டசபைக்குப் போகாமல் இருக்கப்போகிறார்களா? மறுபடியும் அடுத்த கூட்டத்திற்கும் போகத்தானிருக்கிறார்கள். தவிர சுயராஜ்ஜியக்கக்ஷியார்களிலும், பெருந்தனவான்கள், அதாவது சம்பளமில்லாத பேர் வழிகள் தானே வந்திருக்கிறார்கள். சம்பளம் பெறும் கனவான்கள் வந்திருக்கிறார்களா? ஏன்? சும்மாவா? பாக்கியிருக்கும் மாதங்களுக்கு ரூபாய் முப்பதாயிரமல்லவா? இவர்களுக்குப் பிடித்த பயித்தியம் அவர்களுக்குமா பிடிக்கும்? போகட்டும்; சென்னை சட்டசபையில் சுயராஜ்ஜியக் கக்ஷி காங்கிரஸ் கக்ஷிதான்; காங்கிரசுக் கட்டளைப்படி வெளியேறிற்று. இது வரை காங்கிரசு என்றால் வேப்பங்

காயாய் மதித்திருந்த ஸ்ரீமான். தி. அ. ராமலிங்கம் செட்டியாருங்கூடவா வெளியே வரவேணும். இக்கூட்டத்தில் கோவிந்தம் போட்டுவிட்டால், அடுத்த தேர்தலில் கஷ்டமில்லாமல் போய்விடுமென்று நினைத்தார் போலும். எல்லாருடைய நிறையையும் ஓட்டர்கள் குறித்துத்தான் வைத்திருக்கிறார்கள். அடுத்த தேர்தலில், சுயராஜ்யக் கக்ஷிக்காரர்தான் புறக்கணிக்கப் படப்போகிறார்கள். இவர்கள் 40 வருஷமாய் இருந்து வந்த காங்கிரசுக்கு உலைவைத்ததுமன்றி சமீபத்தில் வரப்போகிற சீர்திருத்தத்திற்கும் உலைவைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர், எல்லாவற்றிற்கும் சரி; சரி யென்று சொல்லிவிட்டு, பின்னாலே வராமல் கவுரவமாய் சட்டசபையிலே இருந்துவிட்டார்கள். இது எவ்வளவோ மேல். இன்றைக்குப் பின்னால் வந்துவிட்டு, மறுபடியும் இவர்கள் பின்னால் நாளைக்கு சட்டசபைக்குப் போனால் சிரிக்கமாட்டார்களா? வெளிவந்த வீரர்களுக்கு காங்கிரசுக்காரர்கள் பூரணகும்பம் நடத்தினார்களாம். பேஷ்! பேஷ்!! இவர்கள் நடத்தாவிட்டால் பின் யாரிருக்கிறார்கள்? இது எப்படி என்றால் ஒரு வீரர் யுத்தகளத்திலிருந்து புறமுதுகிட்டு குதிகால் பிடரியில் அடிபட ஓடிவந்தானாம்; வீட்டிலுள்ள அவனுடைய பெண்டுபிள்ளைகள் சண்டை எப்படி என்றார்களாம்; நான் ஜெயித்து விட்டேன் என்றானாம் வீரன். எப்படி யென்று கேட்க, எதிரி கூடிய மட்டும் காத்தனுக், நான் அகப்படாமல் வந்துவிட்டேன் என்றானாம். எல்லாரும் பலே, பலே, என்று குதித்தார்களாம். அப்படிப்போல, இவ்வீரர்களின் செய்கைக்கு சுயராஜ்யக்கக்ஷி—காங்கிரசுக்கட்சி அங்கத்தினர்களும், அக்கட்சி பத்திரிகைகளும், தாண்டவமாடுகிறது. மூக்கிலே புளுத்தால் நாற்றமுண்டோ? உண்மையில் இவர்கள் வீரர்களாயிருந்தால், துறந்த சட்டசபையை எட்டிப்பார்க்காமல் ஜனங்களிடையே பிரசாரம் செய்து, ஒத்துழையாமையை ஆரம்பித்து சட்ட மறுப்புக்குத் தேசத்தைத் தயார் செய்யும் பக்ஷத்தில் இவர்கள் தேசபக்தர்களேதான். அடுத்த தேர்தலுக்கு சுலபமாய்ச் சட்ட சபையில் நுழைந்துவிடலாம் என்று நினைத்து இந்தப் பித்தலாட்டம் செய்தால், மகா ஜனங்களுக்கு மோசம் செய்தவராவார்கள். ஆகையால் மகா ஜனங்களே வாக்காளர்களே, உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை கிரமப்படி நிறைவேற்றாமல் சுயராஜ்யக்கட்சியார் வெளியே வந்துவிட்டு, கவர்ன்மெண்டார் இஷ்டப்படி காரியம் நடத்த விட்டுவிட்டார்கள். போதாக்குறைக்கு மறுபடியும் தேர்தலுக்கு நின்று உங்களை வஞ்சித்து உள்ளே போய் சுகமாய்க் காலங்கழிக்கப் பார்க்கிறார்கள். இந்தத்தபா வெற்றி பெற்றுவிட்டால், மூன்று வருஷத்திற்கு அழிவில்லை. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சூட்சி செய்கிறார்கள். நீங்கள் ஒரு சிறிதும் இடங்கொடாமல் யாருக்கும் ஓட் கொடுக்காதீர்கள். அப்படிக் கொடுப்பதாயிருந்தாலும் சட்டசபையில் உட்கார்ந்துக் கொண்டு இன்னமும் சர்க்காரோடு போராடிக்கொண்டிருக்கிறவர்களுக்கே தேடிப்பிடித்து ஓட்டு கொடுங்கள். ஏதோ, தெரிந்தும் தெரியாமல் சுயராஜ்யக்கட்சிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய பலன் நீங்களனுபவித்துவிட்டீர்கள். தேசத்தில் நடைபெற வேண்டிய, கத்தர், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, சகோதரத்துவம், சர்க்காரின் நடுக்கம், ஒத்துழையாமையின் மகத்துவம், இவையெல்லாம் எங்கே? இது ஒடுங்கியதற்கு யார் ஜவாப்தாரி?, சுயராஜ்யக்கக்ஷியார்தானே! அவர்களைத் தெரிந்தெடுத்தனுப்பிய நீங்களும் ஜவாப்தாரியென்று யேன் சொல்லக்கூடாது?

திருப்பதி.

ஓர் கடிதம்.

மகா-ள-ள-ஸ்ரீ குடிஅரசு பத்திராதிபர் அவர்களுக்கு, ஐயா, இதனடியில் கண்ட சங்கதிகளை தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்யக் கோருகிறேன்.

இப்போது ஸ்ரீமான். C. ராஜகோபாலாச்சாரியார் இவ்விடம் வந்திருந்தபோது கள்ளுக்காக தோப்புகளைக் குத்தகைக்கு கொடுத்திருக்கிறவர்களும், கதர் உடுத்தாதவர்களுமான ஸ்ரீமான்கள். T. A. ராமலிங்கம் செட்டியாருக்கும், C.V. வெங்கிடறமண அய்யங்காருக்கும் ஓட்டு போடும்படிக்கு பிரசாரம் செய்திருக்கிறார். இது காங்கிரசுக்கு சரியா? இவர் பெரிய தேசபக்தரும், காராகிரகம் சென்றவருமே இப்படிப் பிரசாரம் செய்தால், நாங்கள் ஒன்றும் தெரியாதவர்கள் எப்படி உங்களைப் பின்பற்றி நடக்கிறது? இதைப்பற்றி உங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது சங்கதி மஹாத்மா காந்திக்கும் எழுதியிருக்கிறேன். 23—2—26-ல் ஷை சங்கதிகளைப்பற்றி கோயமுத்தூரில் பிரசங்கம் செய்தார்.

முருங்கபாளையம் திருப்பூர். 17—3—26 } பி. நாச்சிமுத்துக் கவுண்டர்.

மதிப்புரை

பகவத்கீதை வசனம்

இஃது சமஸ்கிருத பாஷையில் உள்ள மூலத்தை அதற்கு நேரான எளிய தமிழ் மொழியில்—சென்னை அரசாங்கத்து (சேனிடரி இஞ்சினீர்) சுகாதார சிற்ப சாஸ்திர நிபுணரான—யோ. ற. துரை சிங்கம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. இவர் கல்வியில் ஒரு பெரிய மேதாவி. அதாவது லண்டன் (கிங்ஸ் காலேஜ்) அரசர் கலாசாலை சங்கத்தின் அங்கத்தவரும், அக்கலாசாலை டுறா, கீர்த்தி முத்திரை பொற்பதக்கம் பெற்றவரும், இலங்கை அரசாங்க கணித சாஸ்திர நிபுணப் பரிசு பெற்றவரும், கில்கிரைஸ்ட் வித்தியாசகாய நிதியின் பெரும் பரிசுபெற்றவரும், மற்றும் பல வேதனப்பரிசு, ஆங்கிலப்பரிசு முதலியன பெற்றவரும், கீர்த்திவாய்ந்த நிபுணருமாவார். இவர் கிருஸ்த்துவ மதம் தழுவியவர். இப்புத்தகத்திற்குக் கொழும்பு ஸ்ரீமதி தையல்நாயகியார் எழுதியிருக்கும் முகவுரையில் ஒரு சிறு குறிப்பை இங்கு எடுத்துக்காட்டுகிறோம். அதிலிருந்தே, இப்புத்தகத்தின் பெருமையை உணரலாம். அதாவது "தாம் அறிந்ததை அறிந்தவாறு அறிவிப்பது அரிது; வழங்கும் பதங்களிலும் எளிதான நடையிலும் தத்துவ அர்த்தங்களை விளக்க எழுதுவது மிகவும் அரிது. ஆதலால், இம்மொழி பெயர்ப்பின் ஆசிரியர் அவ்விதம் எளிதான தமிழ் நடையில், இவ்வரிய தமிழ் நூலை விளங்கச்செய்தது ஓர் பேருதவி. அதுவுமன்றி இலங்கைத்தமிழர் வழங்கும் நடையில் இம்மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதானது விசேஷமான பேருதவியாகும்" என எழுதியிருக்கிறார்—அன்றியும் ஆசிரியரால் இப்புத்தகத்திற்கு முகவுரையாக சுமார் 80 பக்கம் எழுதப்பட்டிருக்கிறது. இதில் அநேக தத்துவங்களும் யுக்தி வாதமான பல விஷயங்களும், முக்கியமாய் பகவத் கீதையைப்பற்றிய பலவித அபிப்பிராயங்களையும் சொல்லி சமாதானத்தையும் சொல்லியுள்ளார். இதன் முகவுரையிலிருந்தே அருமையான விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

320 பக்கங்கள் கொண்ட இவ்வருமையான புத்தகத்தின் விலை ரூ. 1—0—0

விலாசம்:—

யோ. ற. துரைசிங்கம் மனோராசு
கீழ்பாக்கம்,—சென்னை.

அறநூல்— (இரண்டாம் பதிப்பு)

இஃது தஞ்சை சபாசபோதினி ஆசிரியர் ஸ்ரீமான் சுத்தானந்த பாரதியாரால் ஆக்கபபட்டது. இது கடவுளியல், அறவியல், துறவியல், சத்தியியல், தொண்டியல், நல்லறவியல், கல்வியியல், முதலிய பதினைந்து இயல்களாகவும் ஒவ்வொரு இயலுக்கும் ஐந்து அதிகாரங்களும் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஐயைந்து குரட்பாக்களுமாக அமைக்கப் பெற்ற ஒரு அருமையான நூல். தேசிய பள்ளிக் கூடங்களில் சிறுவர்களுக்கு பாடமாய் வைக்கக்கூடிய அளவு நீதிகளையும், எளிய நடையையும் உடையது. முகப்பில் ஸ்ரீ. பாரதியார் படமும் ஸ்ரீ.வா.வெ.சு.அய்யர் முகவுரையும் உளது. 0—2—6 அணா தபால் ஸ்டாம்பு அனுப்புவோருக்கு இப்புத்தகம் அவரிடம் கிடைக்கும்.

இராம கிருஷ்ணமிருதம்

இதுவும் ஸ்ரீபாரதியாரால் போடப்பட்டது. ஸ்ரீராம கிருஷ்ணபரம ஹம்சரின் வரலாறும், அவரது உபதேசமும் சுருக்கமாகவும் செய்யுள்களாகவும் பாடி பிரசுரித்திருக்கும் ஒரு சிறு புத்தகம். இதன் விலை அணா 0—6—0.

வருண பேத விளக்கம்

வருண பேத விளக்கம் என்னும் புத்தகம் காலஞ்சென்ற, திரு. ம. மாசிலாமணி அவர்களால் எழுதப்பட்டு தென்னிந்திய பௌத்த சங்கத்தினாதரவில் ஸ்ரீ சித்தார்த்த புத்தகசாலையாரால் பதிப்பித்து பிரசுரிக்கப் பட்டது. இப்புத்தகம் வருண பேதத்தின் இரகசியங்களையும், ஆதிகாலத்திலிருந்தே பிராமணர்களின் சூழ்ச்சிகளையும், தய்வு தாக்ஷண்ணியமில்லாமல் சரித்திரியமாய் விளக்குகிறது. இப்புத்தகத்தை வாங்கிப்படிப்பவர் இவ்விஷயங்களைப் பற்றி நமது "குடி அரசு" எழுதிவரும் விஷயங்கள் இப்புத்தகத்திலிருந்து எடுத்தெழுதப் பட்டதோ, அல்லது குடி அரசிலிருந்து எடுத்து இப்புத்தகம் எழுதப்பட்டதோ என்று நினைக்கும்படி பெரும்பாகம் ஒத்திருக்கும். ஆதலால் சிற்சில விஷயங்களில் அபிப்பிராயபேதம் இருந்த போதிலும், ஜாதி உயர்வு-தாழ்வு இரகசியம் அறிய ஆவல் கொண்டவர்கள் இதனை வாங்கி வாசிக்க சிபார்சு செய்கிறோம். இதன் விலை அணா 0—4—0.

திருக்குறள் கடவுள் வாழ்த்து உரை.

இது திருவள்ளுவர் குறளிலுள்ள கடவுள் வாழ்த்து என்னும் முதல் அத்தியாயத்திற்கு ஸ்ரீ அயோத்திதாஸ் பண்டிதரால் இயற்றிய உரையுடன் மேற்படி சித்தார்த்த புத்தகசாலையாரால் பிரசுரிக்கப்பட்ட சிறு புத்தகம்

விலை அணா 0—1—6

விலாசம்:—, சித்தார்த்த புஸ்தகசாலை,
சாம்பியன் ரீவ்ஸ் போஸ்ட்,
கோலார் கோல்ட் பீல்ட்.

அனுபவ சோதிட ரத்தினம்.

இஃது திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூக்கா பாப்பான் குளத்திலிருக்கும் சோதிட சாஸ்திரி V. ஆறுமுக முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, இது மிகவும் உபயோகமான புஸ்தகம். ஜாதகத்தை கையில் வைத்துக்கொண்டு அவரவர்கள், ஆயுள், ஆஸ்தி, சகோதரம், புத்திரன், களத்திரம், மார்க்கம், பிதுர்மார்க்கம் ஜீவனபாகம் முதலியவைகளை யாவருடைய உதவி யன்னியில் யதார்த்தத்தை அறிந்து கொள்ளலாம். இதன்றியும் சோதிடம் கற்றுக்கொள்பவருக்கு வேண்டிய அனுகூலங்களும், பல ராசிச் சக்கரங்களும், பலவிஷயங்களுக்கு உதாரணங்களும் இப்புத்தகத்தில் தெளிவாய் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தின் விலை ரூ. 1—0—0
விலாசம்:—

V. ஆறுமுக முதலியார்
சோதிட சாஸ்திரி, பாப்பாங்குளம்
திருநெல்வேலி ஜில்லா
ஆள்வார்குறிச்சி மார்க்கம் S. I. R

ஊழியன் அவதூறு வழக்கு.

(ஒரு நிருபரிடமிருந்து.)

இவ்வூர் ராவ் பகதூர் ஆவி. பழ. சிதம்பரஞ் செட்டியார் ஊழியன் ஆசிரியர் ராய சொக்கலிங்கன் மீது இ. பி. கோ. ௫00-வது செக்ஷன் படி தொடர்ந்திருக்கும் அவதூறு வழக்கு இராமனுதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் முன்னர் இராமனுதபுரத்தில் இம் மார்ச்சு மீ ௩௨உ எடுத்துக்கொள்ளப் பட்டது. வாதி இராமனுதபுரம் நீதி மன்றத்தைவிட்டு வேறு நியாயஸ்தலத்திற்கு மாற்றவேண்டுமென்று சென்னை உயர்தர நீதி மன்றத்தில் கொடுக்கப் பெற்றிருந்த மனுவின் பேரில் இராமனுதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுக்குத் தடை உத்தரவு வந்திருந்தது. வாதிக்காக முன்னர் பிராசிகியூட்டிங் இன்ஸ்பெக்டராகவிருந்த ஒரு ஐயங்கார் வக்கிலாக ஆஜராகி பிராது மாற்றவேண்டுமென்று மனுக் கொடுத்து உயர்தர நீதி மன்றத்தில் தடையுத்தரவு வாங்கியதாகவும் இப்பொழுது பிளீடர்க் இல்லாததால் அதை வாபீஸ் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்திருப்பதாகவும் ஒரு வாய்தா தரவேண்டுமென்றும் கேட்டார். எதிரிக்குப் பெரியணைபிள்ளையென்பவர் வக்கீலாக ஆஜராகி சென்னை உயர்தர நீதிமன்றத்தில் வாதியால் கொடுக்கப்பட்ட மாற்று மனு சென்ற வியாழனன்று சென்னை உயர்தர நீதிமன்றத்தில் தள்ளுபடியாகிவிட்டதென எதிரிக்குச் சென்னையினின்றும் கம்பிச் செய்தி வந்திருப்பதால வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வாதித்தார். மாஜிஸ்திரேட் உயர்தர நீதிமன்றத்தில் மனுத் தள்ளுபடியானது பற்றித் தமக்கு ஒரு தகவலும் இல்லையாதலால் தமக்குக் கிடைத்த தடையுத்தரவைக் கொண்டு ஏப்ரல்மீ ௩௦உ க்கு (அட்சய சித்திரை ௩௨) இராமனுதபுரத்தில் வாய்தாப் போட்டிருக்கிறார்.

காலஞ்சென்ற ஸ்ரீமான். வா. மு. தங்கப்பெருமாள் பிள்ளை

(நாடெங்கும் அநுதாபக்கூட்டம்.)

தர்மபுரி.

12—3—26 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இந்நகர் மகாத்மா சங்கத்தின் ஆதரவில் காலஞ்சென்ற பிள்ளையவர்களின் மரணத்தை முன்னிட்டு அநுதாபக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஸ்ரீமான். டி. ஏ. குருசாமி செட்டியார் அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமான். எஸ். ஆர். தர்மலிங்கம் பிள்ளை காலஞ்சென்றவரின் ஜீவிய சரித்திரத்தைக் கூற, அநுதாபத் தீர்மானம் யாவரும் எழுந்து நிற்க நிறைவேற்றப் பட்டது என ஸ்ரீமான். நா. தேவராஜன் எழுதுகிறார்.

சென்னை.

இம்மாதம் 14-ந்தேதியன்று சென்னையில் காங்கிரஸ் கமிட்டியினாதரவில் ஓர் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீமான். பாஷ்யம் அய்யங்கார் தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள். ஆதிகேசவலு நாயக்கர், கிருஷ்ணசாமிப்பாவலர் ஆகியவர்கள் ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளையின், தேசபக்தியையும், சுதருக்காக அவர் செய்த அரிய தொண்டையும் விரிவாகப் பேசியபின், அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஸ்ரீமான். பாவலர், காலஞ்சென்ற பிள்ளையின் தொண்டைப் பாராட்டிப் பேசும்போது, பாரதப்போரில் அபிமன்யுவினுடைய தியாகத்திற்கு ஒப்பிட்டுப் பேசினார்.

திருப்பூர்.

காலஞ்சென்ற பிள்ளையவர்களின் மரணத்திற்காக அநுதாபக் கூட்டமொன்று திருப்பூர் மங்கள விலாஸ ஹாலில் கூடிற்று. ஸ்ரீமான். கே. எஸ். இராமசாமிக் கவுண்டர் அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமான்கள் மா. வெ. கருப்பண்ண செட்டியார், கே. வி. வெங்கிடாசலம் பிள்ளை, இக்னேஷியஸ், வெங்கிட்டப்பக் கவுண்டர் ஈஸ்வரமூர்த்திக் கவுண்டர் முதலியவர்கள் பேசியபின், அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கும்பகோணம்.

I

கும்பகோணம் வக்கீல் சங்கத்தார் ஓர் கூட்டம் கூடி ஸ்ரீமான். பிள்ளையவர்கள் இறந்ததைக் குறித்து வருந்தி ஓர் அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

II

16–3–25-ந் தேதி கும்பகோணம் சுயராஜ்யக்கக்ஷியின் ஆதரவில் ஓர் மகாநாடு நடைபெற்றது. ராவ் சாகிப் லக்ஷ்மிவராக ஐயங்கார் அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமான்கள் சுவாமிநாத செட்டியார், சீனிவாசாசாரியார் முதலியவர்கள் பேசியபின் அநுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம்.

9–3–26-ல் சேலம் விக்டோரியா மார்க்கெட்டில் காலஞ்சென்ற பிள்ளையவர்களின் மரணத்தை முன்னிட்டு ஓர் அநுதாபக்கூட்டம் நடைபெற்றது. ஜனாப் டி. அக்பரல்லாகான் தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள். பி. கந்தசாமி பிள்ளை, முனியப்பபிள்ளை முதலியோர் பிள்ளையவர்களின் தேசபக்தியைப் பற்றிப் பேசியபின் அநுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தேசோபகாரி'
பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும்
ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி ரங்கூன்.

"தெய்வீகன்'
பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி
யுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

மதிமோச விளக்கம்.

உலகானுபவம் பெறவேண்டுமானல், உடனே "மதிமோச விளக்கம்" என்னும் புஸ்தகத்தை வாசியுங்கள். இந்நூல் ஸ்ரீமான். தாசி. இராஜகோபால பூபதி அவர்களால் இயற்றப்பட்டது. இதில் உலகத்தில் நடக்கும், பலவகை மோசங்கள் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் ஷை மோசக்காரர்கள் வசம் அகப்படாமல் தப்பித்துக்கொள்வார்கள் என்பது திண்ணம். இது படிக்கப் படிக்க மிகவும் இன்பமாய் இருப்பதன்றி விடாநகைப்பையும் விளைவிக்கும். நமது நாட்டுப் பெண்கள் இப்புத்தகத்தை படித்தால் குருட்டு நம்பிக்கை என்பது நமது நாட்டை விட்டு ஓடிப்போகும். 230 பக்கங்கள், 120 மோசங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 1-0-0 வி. பி. சார்ஜ் வேறு.

ஜி. செல்வபதி செட்டி அண்டு கோ.,
பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ்.

உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சப் பத்ரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

S. ராமநாதன்
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:— ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்தகத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

S. ராமநாதன்
காரியதரிசிகத்தர், இலாகா.

சேலம் பனியன்கள்.

எங்களிடம் பலமாதிரியான பனியன்கள் தயார் செய்யப்படுகிறது. வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் இதர விஷயங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விக்டோரியா நிட்டிங் பாக்டேரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.

என்றுமறியாத இணையில்லா கீர்த்தி.

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கைகால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45 வருஷகாலமாக என்றுமறியா இணையில்லா கிர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துக்கொண்டிருக்கும் நற்சாக்ஷிப்பத்திரங்களே போதுமான சான்றாகும். இன்றைக்கே உபயோகித்து குணத்தையறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ் நாடு கதர் போர்டின் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அநுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்
கத்தர் ஸ்டோர், அமராவதிபாளையம்
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு
திருப்பூர் மார்க்கம்

தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

உள்நாட்டிற்கு ரூ. 2—8—0
வெளிநாட்டிற்கு ரூ. 3—0—0
சாதாரண பதிப்பு ரூ. 2—0—0

விலாசம்:—

அமைச்சர்
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

காப்பு திரவியம் — ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ 5,00,000.
வெளிவிடப்பட்டது — ரூ. 64,600.
வசூலிக்கப்பட்டது — ரூ. 35,540.
டிபாஸிட்டுகள்— ரூ. 42,012–14–0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கோள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷக் கேடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0.
'வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0.
இதற்கு பிரதிமாதமும் வட்டிகொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கேடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0.
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12.—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக் கொருமுறை யாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டி கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒருவருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது, நாளது 10—2—26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும். குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாய்க்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினுலேயும், மானேஜிங் டைரக்டர், அவர்களுடைய திறமையினுலும், முயர்சியினுலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதுவும் தவிர (**Reserve Fund**) காப்பு திரவியமும் ரூபாய் 2,706-0-0 சேர்ந்திருக்கிறது, நாளது வரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்லஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய ;உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.
சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:— இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை, டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும், இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கும் யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினுலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமசந்திர செட்டி,
10—2—26. மானேஜிங் டைரக்டர்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.